

# ரமணோதயம்

ஏப்ரல் 2014

காலாண்டு

ஆராதனை இதழ்

விலை ₹ 20

# ஸ்ரீ ரமணாச்ரமத்தில்
# ஸ்ரீவித்யா ஹோமம்







உதயம் 13 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 3

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஆராதனை இதழ்

ஏப்ரல் 2014

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் ‘ரமணோதயம்’ என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2014


| வ.எண் | பொருள் | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | 3 |
| 2 | உயிருள்ள தீச்சுடர் நொச்சூர் வேங்கடராமன் | 15 |
| 3 | அழகு மிளிர் அக்ஷரமணமாலை<br>கீதா ரவிச்சந்திரன் | 16 |
| 4 | கடவுளின் சர்வ வல்லமையைச் சந்தேகிக்காதீர்கள்<br>(ஸ்வாமி சிவானந்தரின் உபதேசக் கதையிலிருந்து) | 25 |
| 5 | இனிவரும் திருநாட்கள் - 2014 | 28 |
| 6 | ரமணோதயம் காப்புநிதி<br>தொடரும் நன்கொடையாளர்கள் | 28 |
| 7 | பிறந்த இடத்திற்கே போய்ச் சேருவோம்<br>சேலம் சேதுகுமரன் | 29 |
| 8 | ரமண மஹா ஸமுத்திரத்தில் நானும் ஒரு துளி<br>ஆவேனோ? - பிர. கிரிதர ஜகதீஷ் | 37 |
| 9 | நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை<br>Dr.ஏ.வி.ராஜகோபாலன் | 48 |
| 10 | ரிபுகீதை தியாகராஜன் | 55 |
| 11 | திரு ரமணக் குறள் | 62 |
| 12 | மஸ்தான்பாபா மாலை<br>கருணா (எ) நமச்சிவாயம் | 64 |
| 13 | புத்தக மதிப்புரை | 69 |
| 14 | செய்திகள் | 72 |

# ஆசிரியர் உரை

## ஏணிப் படிகளில் ஏற்றும் ஏகான்ம குரு

ஆதிசங்கரர் தம் சீடர்கட்கு இறுதியாகக் கொடுத்த உபதேசமான ஸோபானா பஞ்சகம். ஸோபான என்றால் 'ஏணி' என்பது பொருள். ஆன்ம சாதனையில் மேலேறிச் சென்று ஆத்மசாட்சாத்காரத்தை அடைவது என்பதே இதன் தாத்பர்யம். சங்கரர் நாற்பது வழிமுறைகளை இதில் கூறியுள்ளார். பகவான் தனது நேர்வழி உபதேசமாகக் கூறியது 'ஆன்ம விசாரம்' அல்லது 'நான் யார்' என்னும் உண்முகத் தேடலே. ஆயினும், இம்மார்க்கம் எளிதில் புரியாத அல்லது இதற்கான மனப் பக்குவம் அடையாத மாந்தர்க்கு அம் மனப் பரிபக்குவம் அடைய பகவானும் ஓர் ஏணியைக் காட்டுகிறார். எது அது? உள்ளது நாற்பது அநுபந்தத்தில் இப் படிப்படியான ஏணியைப் பகவான் காட்டுகிறார்.

*சத்திணக் கத்தினாற் சார்பகலுஞ் சார்பகலச்*
*சித்தத்தின் சார்பு சிதையுமே — சித்தச்சார்*
*பற்றா ரலைவிலதி லற்றார்சீ வன்முத்தி*
*பெற்றா ரவரிணக்கம் பேண்.*

(உள்ளது நாற்பது அநுபந்தம் 1)

என்னும் இப்பாடலே பகவான் காட்டும் ஸோபானம்.

"மெய்யுணர்வாம் தன் இருப்பிலேயே எப்பொழுதும் நிலைத்திருக்கும் ஜீவன்முக்தர்களோடு எப்பொழுதும் சேர்ந்து இருப்பாய். அப்போது வெளி உலகப் பற்று ஒழியும். வெளி உலகப் பற்று ஒழியும்போது மனம்

சார்ந்த வாசனைகளும் ஒழியும். சித்தம் தூய்மை பெறும். எப்பொழுதும் அலைந்து கொண்டிருக்கும் தனது சலனம் முற்றும் நீங்கப் பெறும். அப்பொழுது சாதகர்கள் 'சத்' என்னும் அந்த மெய்ப்பொருளிலேயே ஒடுங்கி, அகந்தை அழிந்து, அதுவே ஆவர். ஆகையால் அத்தகைய ஜீவன் முக்தர்களின் இணக்கத்தையே எப்போதும் விரும்பி, சதாகாலமும் அவர்தம் தொடர்பிலேயே இருப்பாயாக," என்பதே இதன் பொருள். ஆதிசங்கரரின் பஜகோவிந்தத்தின் ஒன்பதாவது சுலோகம் ஆகிய

ஸத்ஸங்கத் வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்
நிர்மோஹத்வே நிஸ்சல தத்வம்
நிஸ்சலதத்வே ஜீவன் முக்தி

என்பதைத் தழுவி பகவானால் படைக்கப்பட்ட பாடலிது.

"ஸத்"தின் வடிவம் ஸத்குரு. ஆன்ம சாதனையின் ஆரம்பமாவது ஸத்குருவினிடம் தீவிர நம்பிக்கையும் பக்தியும். அந்த பக்தி எப்படி வரும்? தனியாக அறையிலேயே இருந்து பக்தி பண்ண முடியுமா? முடியும். ஆயினும் அதற்கு நிறையத் தடைகள் வரும். அன்பர் குழாம் ஆகிய ஸத்ஸங்கத்தில் சேர்ந்து கொண்டால், நம்மை அறியாமலேயே அவரது பக்தியும், சிரத்தையும் நம்மிலே படியும். தனியாக ஆரம்ப காலத்தில் சாதனை செய்ய முற்படும்போது, பெரும்பாலோர்க்கு சோம்பல் வந்து தடுக்கும். அறிவு அதைத் தொடராமல் இருக்கக் காரணங்களைத் தேடும்! ஆனால் ஸத் சங்கத்தில் இணைந்து விட்டால், நல்ல பழக்கங்கள் தாமே வந்து சேரும். திருக்குறளில் கூறுவது:

"நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்துஇயல்ப தாகும் அறிவு"

நிலத்தின் இயல்பால் நீருக்கு நிறமும், சுவையும் வருவதுபோல, நாம் சார்ந்த இனத்தின் இயல்பால் நமக்கு

நற்பண்புகள் தாமே வந்து சேரும். அந்த சத்சங்கத் தொடர்பினால் மெல்லப் பக்தி உணர்வு தோன்றும். தென்னை மரத்தில் இளநீர்க் காய்க்குள் நீர் நிரம்புவது போல நம்மை அறியாமல் மனம் பண்படும். சாதனை முகிழ்க்கும் இந்த அரும்பு நிலையில் இருந்து, சாதனை மலராகி, முதிர்ந்து காயாகிக் கனிந்து இனிக்கின்றது. அல்லும் பகலும் ஸத்குருவையே தியானிக்கும் அன்பர்தம் ஸத்சங்கத்தில் சேர்ந்ததிலிருந்து இந்த ஏணிப் பயணம் துவங்குகிறது.

“பகல் இரவா நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து” என்கிறார் அபிராமி பட்டர்.

ஆரம்ப கால சாதனை விரிவாகவும், கடுமையாகவும் இருக்கும். சாதனை கனியக் கனிய, கருணையும், விரியும், குவியும். தஞ்சை கோபுரம் அடியில் விரிந்து, வர வர குறுகிக் கும்பத்தில் முடிவது போல, யோகம், பிராணாயாமம் போன்ற விரிவான முயற்சிகள் சுருங்கி, ஆன்ம விசாரம் என்னும் கும்பத்தில் முடியும். சத்சங்கத்தினை நாடிச் சென்ற உடல் முயற்சியில் ஈடுபட்டது, வாக்கும் மனமும் இறை தொழிலில் ஈடுபட்டன.

திடமிது பூசை செபமுந் தியான
முடல்வாக் குளத்தொழி லுந்தீபற
வுயர்வாகு மொன்றிலொன் றுந்தீபற.

என பகவான் உபதேசிப்பதுபோல், உடல் வாக்கும், உள்ளம் இவற்றின் முயற்சியால் எழும் பூஜை, ஜபம், தியானம் இவற்றையும் கடந்து அனைத்திலும் உயர்வாகிய ‘ஒன்றில்’ ஆத்மாவில் ஒன்றும் நிலை எய்துகிறது.

“ஒருவனது ஆன்மிக சாதனையில் மிக முக்கியமான பெரும் பங்கேற்பது அவனுக்கு கிட்டும், சத்சங்கமே ஆகும்”; என சாதுஓம் ஸ்வாமிகள் அறுதியிட்டுக்

கூறுகிறார். பார்க்கப்போனால் 'ஸத்' என்ற சொல்லுக்கு 'ஆத்மா' என்பதே பொருள். எனவே, சத்சங்கம் என்றால் ஆன்மாவுடன் கொள்ளும் தொடர்பு என்பதே பொருள். தனிமையில் இருந்த ஆத்மாவுடன் சாதனை மூலம் தொடர்பு கொள்ள முயல்வது ஆரம்பத்தில் கடினமாக இருக்கலாம். எனவே, ஸத் பொருளாகிய ஆத்மாவை சாட்சாத்காரமாய் அறிந்த ஞானியும், ஆத்மாவே ஆதலால், ஜீவன்முக்தராய் உள்ள ஞானியுடன் கொள்ளும் தொடர்பும் சத்சங்கமே ஆகும்.

"சத்தொடு நம் சங்கமே சத்சங்கம்; ஆன்மாவே
சத்; அதனில் நிற்றலே சத்சங்கம் - சத்தினைச்
சாட்சாத்கரித்த மஹாசாதுக்களும் சத்தே;
ஆட்பட்டு அவர்பால் இரு"

(சாதனைசாரம் 16)

சத்சங்கத்தில் ஒருவன் இருக்கும்போது, தன் முயற்சி இல்லாமலேயே, சத்வ குணங்கள் மேலிடும். மன அலைவுகள் நீங்கி, மனம் அமைதி பெறும் ஞானியின் உள்ளத்தில், அகந்தை இருள் இல்லை. அருள் ஒளி பிரகாசிக்கின்றது. பிரகாசிக்கும் அந்தக் கதிர் ஒளியின் அருள் வீச்சில் அதன் எல்லைக்குள் வருபவர் மனதின் எதிர்மறை எண்ணங்கள் அழிந்து, முமுட்சுத்வம் என்னும் ஆன்ம எழுச்சி தோன்ற ஆரம்பிக்கும்.

"அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும்,
தொழும்பர் உளக் கோயிற்கு ஏற்றும் விளக்கு"

என்று குமரகுருபரர் பாடுகிறார். இந்த அகந்தையை சத்சங்கத்தினால் அகழ்ந்து எடுக்க இயலும். அப்போது அகந்தையும், மமகாரமும் அழிகிறது.

"யான் எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

என்னும் குறளில் அகங்காரமும், மமகாரமும் நீங்கியவர்கள் முக்தி அடைவார்கள் என்று வள்ளுவர் கூறுகிறார்.

சாதுக்கள் சங்கத்தினால், மனம் தானே தூய்மை அடைந்து இதுகாறும் இருந்த தீய வழக்கங்கள் தாமே சாதகர்களை விட்டு அகல்கின்றன. தன் முயற்சி ஏதுமின்றி, மஹான்களின் அருள் பிரகாசத்தினால் இது நிகழ்வதால் 'சார்பு அகல' என்று பகவான் கூறுகிறார். 'சார்பு அகற்றி' என்று கூறவில்லை. உலகச் சார்பு இவ்வாறு அவர்களை விட்டுத் தாமே அகன்று விடுகின்றன. ஸ்ரீருத்ரத்தில் 'ஊர்வாருகமிவ பந்தனாத்' என்று வெள்ளரிப்பழம் கொடியிலிருந்து விடுபடும் உதாரணம் காட்டி, இறையருளால் உலக பந்தத்தை விட்டு ஜீவன் நீங்குகிறது; என்பதை விளக்கும்போது, "மா, வாழை போன்ற பழங்கள் கனியும்போது, அவை தம் முயற்சியால் கிளையை விட்டு நீங்குகின்றன. அவை போலன்றி, வெள்ளரி தரையில் படரும் கொடியில் காய்ப்பது. அது கனியும்போது, கொடி தானே அதை விட்டு நீங்கிவிடுகிறது. அதுபோல, சாதகன் பூர்ணத்துவம் அடையும்போது, அவனது முயற்சி ஏதும் இன்றி, உலகம் தானே அவனை விட்டு நீங்கி விடுகிறது" என்று சங்கரர் விளக்குகிறார்.

தீய பழக்கங்கள் நீங்கும்போது, அவை இதுவரை தமக்கு தீனியாகக் கொண்டிருந்த உலக விஷய சம்பந்தங்களும் விலக்கப்படுகின்றன. உலகப் பற்றுகள் நீங்க நீங்க, அவை சார்ந்து இருந்த பண்டை வாசனைகளும் வலு இழக்கின்றன. இதையே பகவான் 'சார்பு அகல, சித்தத்தின் சார்பு சிதையுமே' என்று குறிப்பிடுகிறார். இங்ஙனமே, வாசனைகள் வலுவற்றுப் போகும்போது, சித்தத்தில் ஏற்படும் சலனங்கள் அழிகின்றன. கண்ணாடியின்மேல் படிந்துள்ள அழுக்கு நீக்கப்படும் போது, படிப்படியாக பிரதிபலிக்கும் பிம்பம் தெளிவாக தெரிவதுபோல, தன் இருப்பு உணர்வு, தெளிவாக ஸ்புரிக்க ஆரம்பிக்கிறது. மனம், விஷயம் பொருட்க ளாகிய முன்னிலை - படர்க்கைகளைச் சார்வது அற்றுப் போகும்போது, ஆத்ம விசாரம் - உள்முக நாட்டம் -

சிந்திக்கத் துவங்குகிறது. இதனை பகவான் இரண்டாவது பாடலில், 'சாது உறவு சார, உளம் சார் தெளி விசாரத்தால்' என்று குறிப்பிடுகிறார். இது ஏணியின் இரண்டாவது படி, உலகப் பொருட்களின் மீது உள்ள பற்று, இங்ஙனம் விடுபடும்போது, மனமானது தனக்குச் சார்பை நாடி, ஆத்மாவையே பற்றுக்கோடாக பிடித்துக் கொள்கிறது.

"பைங்கொடியா நான் பற்றின்றி வாடாமல்
பற்றுக் கோடாய்க்கா அருணாசலா"

என்னும் இந்தப் பரிணாமமே ஏணியின் மூன்றாவது படி ஆகும்.

எந்த முயற்சியும் ஊக்கத்துடன் இடைவிடாது செய்தால்தான் நல்ல பயன் உண்டாகும். ஆத்ம சாட்சாத்காரம் பெற முயலும் சாதனையிலும் இடைவிடாத ஒருமைப்பாடு இருக்க வேண்டும். பரமாத்மா எங்கும் பரந்துள்ளது. அது நாமரூபம் கடந்தது. நம் இதயத்திலேயே என்றும் 'நான்' என்னும் ஸ்புரண உணர்வாய் ஒளிர்ந்து கொண்டிருப்பது. மனத்தைத் தூய்மைப்படுத்தி பற்றுகளை விடுத்த, வாசனைகள் நீங்கிய மனதை உண்முகப்படுத்தி, ஆத்ம தரிசனம் பெற வேண்டும். இது இயலாவிட்டால் சத்சங்கத்தை உறுதியாகப் பற்றி, ஸத்குருவினையே இடைவிடாமல் தியானிக்க வேண்டும். இறைவனுக்கு பல்வேறு வெளிப்பாடுகள் இருக்கலாம். ஆனால் அதில் ஒன்றை இடைவிடாமல் பற்றி உள்ளத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். புறக்கடையில் எங்கு வெட்டினாலும் தண்ணீர் வரும். ஆனால் மாறி மாறி வெட்டாமல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இடைவிடாமல் வெட்டினால்தான் தண்ணீரைக் கண்டுகொள்ள முடியும். அது போலவே, இறை வெளிப்பாடுகள் பலவாக இருந்தாலும் எதில் நம் மனம் இயல்பாக ஒன்றுகிறதோ அதைப் பற்றி தியானம் செய்ய வேண்டும். பல இடங்களில் நீர் இருக்கும் அடிப்படை இருந்தாலும் ஓர் இடத்தில் ஊற்றுப்பெருக்கு

தொடர்ந்து பிரவாகமாக இருக்கும். அதுபோன்றே இறைமையின் வெளிப்பாடு பிரவாகமாக ஊற்றெடுத்துப் பெருகுவது; ஸத்குருவின் தோற்றத்தில்தான். எனவே, ஸத்குருவினை உண்முகப்படுத்தி, தியானிக்க வேண்டும். அதுவே அடுத்த படி.

"ஒன்றே நினைத்து இருந்தேன், ஒன்றே
துணிந்து, ஒழிந்தேன், ஒன்றே என்
உள்ளத்தில் உள் அடைந்தேன்"

எனக் காரைக்கால் அம்மையார் பாடுகிறார்.

இங்ஙனமே, சத்குருவாம் ஸ்ரீரமணரைத் தியானிக்க வேண்டும்.

வீதிக்கு நடுவில் விளக்கை ஏற்றி வைத்தால் அது நிற்காது. பாதுகாப்புடைய அறையில் ஏற்றி வைத்தால், அது தளராமல் எரியும். அடியார் கூட்டத்தில் நாம் சேர்ந்து விட்டால் நமது தியானத்திற்கு அதுவே பாதுகாப்பு. பக்தி கொண்டவர் கூட்டத்தில் நாம் இருந்தால் அந்த பக்தி மேலும் மேலும் வளரும்.

"கொள்ளேன் மனதில் நின் கோலம் அல்லாது
அன்பர் தம் கூட்டம் தன்னைத் தள்ளேன்"

என்று பட்டர் பாடுகிறார்.

உள்ளது நாற்பது அநுபந்தத்தில் இரண்டாம் பாடலில் இக்கருத்தினை மேலும் உறுதிப்பட பகவான் மொழிகிறார்.

சாதுறவு சாரவுளஞ் சார்தெளிவி சாரத்தா
லேதுபர மாம்பதமிங் கெய்துமோ — வோதுமது
போதகனா னூற்பொருளாற் புண்ணியத்தாற் பின்னுமொரு
சாதகத்தாற் சாரவொணா தால்.

இதன் பொருளாவது, ஜீவன் முக்தர்களாகிய சாதுக்க ளுடன் உறவு கொள்வதால், ஒருவன் உள்ளத்தில் தெளிவான ஆன்ம விசாரம் தொடர்கிறது. அந்த ஆத்ம விசாரணை முழுமை அடையும்போது, சாதகனது

வாழ்நாளிலேயே, ஸஹஜ சமாதி என்னும் உயர்ந்த நிலை கிடைக்கிறது. அந்த உயர்ந்த நிலையானது சாஸ்திரங்களை போதிக்கும் பண்டிதனாலேயோ, அல்லது தாமே சாஸ்திர நூல்களை ஆராய்வதனாலோ அல்லது அவை கூறும் புண்ணிய கர்மங்களைச் செய்வதினாலேயோ அல்லது வேறு எந்த சாதனைகளாலேயோ அடைய முடியாததாகும்.

சாது சங்கம் எல்லா சாதனைகளிலும் உயர்ந்த சாதனை. அது சாதகன் உள்ளத்தைத் தெளிவாக்குகிறது. அதுவே ஸஹஜ சமாதியை அளிக்க வல்ல உயர்ந்த சாதனம் என்பதை பகவான் இங்கு வலியுறுத்தி இருக்கிறார். நாம் அடைய வேண்டிய மிக உயர்ந்த நிலை - "ஏது பரமாம் பதம்" என்று பகவானால் குறிப்பிடப்படும் நிலை - ஆன்ம விசாரத்தால் மட்டுமே அடைய முடியும் என்பதை பகவான் கூறுகிறார். இங்ஙனம் ஆன்மிக ஏணிப்படிகளை பகவான் விளக்குகிறார்.

பரம பதத்தை அடைய உதவும் சாதனமாகிய ஆத்ம விசாரம், சத் சங்கம் அல்லது சாதுக்களின் உறவினால் மட்டுமே கிடைக்கும் என்கிறார் பகவான்.

சாதுக்களின் சங்கம் அருளாநுபவம் பெறும் வழியில் நமக்குத் துணை நிற்கும் - என்பதை ஞானிகள் பலரும் எடுத்துரைத்துள்ளனர்.

"அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே"

என்கிறார் தாயுமானவர். "பேரின்ப நிலையை நான் தேடிப் போக வேண்டிய அவசியமே இல்லை. அதுவே என்னை நாடி வரும் வழி ஒன்று உள்ளது, அந்த வழி, சத்சங்கத்தில் சேர்ந்து, அவர்கட்கு சேவை புரிதலே. அங்ஙனம் சத்சங்கத்தில் என்னை அருட் கூர்ந்து நீ சேர்ந்து விட்டாயானால் அதன் மூலமே நான் ஆத்ம சாட்சாத்காரம் பெறுவேன் என்கிறார் தாயுமானவர். இந்த சத்சங்கச்

*சிறப்பை திருத்தொண்டத் தொகையாகப் பாடியுள்ளார் சுந்தரமூர்த்தி நாயனார்.*

*"அடியார் நடுவுள் இருக்கின்ற அருளைப்*
*புரியாய் பொன்னம்பலத்து எம்முடியா முதலே"*

*என மணிவாசகர் தம்மை சத்சங்கத்துள் இருத்த இறைவனை வேண்டுகிறார்.*

*இந்தப் பிறவி எடுத்ததன் நோக்கம் யாது? மீண்டும், மீண்டும் பிறவி எடுக்காமல் இருப்பதுதான்! பிறவி எடுப்பதாகத் தோன்றும் 'நான் யார்' என்பதை உள்முக நோக்கினால் கண்டறிவதுதான் மெய்யான சத்சங்கம் என்பது.*

*ஜீவன் முக்தனையே ஸத்குருவாக அடைந்து வழிபடுவதால் மனம் ஒருமுகப்பட்டு, ஆன்ம விசாரம் இதயத்தில் எழுந்து, தன்மை உணர்வு மாத்திரமாய் ஆத்ம சாட்சாத்காரம் சித்திக்கும்.*

*"சிவயோகி தன்னை உபாசித்து ஒழுக நாளும்*
*பவரோக மாயம் பறக்கும் - அவதானம்*
*ஒன்றே உள்ளத்து உதித்து வெற்று உணர்வாய்*
*நின்றே ஆன்மாவில் நிலைத்து.*

*(குருவாசகக் கோவை, 661)*

*ஆத்ம சாட்சாத்காரத்தை ஸத்குருவின் ஸங்கத்தால்தான் அடையக் கூடும். இதனை வெற்றுரைகளைக் கேட்பதாலும், சாஸ்திர நூல், ஆராய்ச்சியாலும், புண்ணிய கர்மாக்கள் என்று நாம் எண்ணுவதைச் செய்வதாலும் அடைய முடியாது" என்கிறார் பகவான்.*

*இந்த கருத்தை உபநிடதங்களும் வலியுறுத்துகின்றன.*

*நாயயித்மா ப்ரவசனேன லப்ய:*
*மமேதயா ந பஹீதா ஸ்ருதேன*
*யமேவைஷ வ்ருணுதே தேன லப்ய:*
*தய்யைவு ஆத்மா விவ்ருணுதே து நூம் ஸ்வாம்"*

*(கட உபநிஷதம் 10)*

இவ்வாத்மாவை வேதங்கள் கற்பதன்மூலம் அடைய முடியாது. கூரிய புத்தியாலோ, நிறைய நூல்களைக் கற்பதாலோ இது கிடைப்பதில்லை (உண்மையான விசாரத்தில் எவன் ஈடுபடுகிறானோ) அவனை ஆத்மா தேர்ந்து எடுத்து அவனால் அடையப் படுகிறது. 'தான்' என்னும் உண்மை வடிவை ஆத்மா வெளிப்படுத்துகிறது". ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுகிறார், "மறை நூல்கள் இறைவனைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. அவ்வளவே! பஞ்சாங்கங்கள் மழைவரும் தேதியைக் குறிப்பிடுதலால் அவற்றைக் கசக்கிப் பிழிந்தால் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வராது! "ஆத்மாவை அறிய சத்சங்கத்துடன் தொடர்பு கொண்டு, ஆழ்ந்த ஆன்ம விசாரத்தில் மூழ்க வேண்டும்".

சாதுக்களின் சகவாசம் - உறவு ஆன்ம சாட்சாத்காரம் பெற அத்யாவசியத் தேவை என்று பார்த்தோம். எல்லோராலும் சத்குருவின் கூடவே இருக்க முடியுமா? என்ற ஐயம் எழலாம். ஆத்ம ஞானம் அடைந்துள்ள ஞானி எங்கும் பரந்துள்ளவர். அவரது சகவாசத்திற்காக அவரது ஸ்தூல உடல் அருகில்தான் நாம் போய் வசிக்க வேண்டும் என்பதில்லை. அவ்வாறே கூடவே தங்கி இருக்காவிட்டாலும், அவர்பாலும் அவர் உபதேசங்கள் மீதும் முழுமன ஈடுபாடு ஏற்பட்டு விட்டாலே, அவரது உறவு அடையப் பட்டுவிடும். அவரது திருவுருவை பக்தியோடு சிந்தித்தாலே போதும். அவரருளால் நம்மில் ஆன்ம ஞானம் ஒளிரும்.

"சித்த நசித்து சிவமயமாய் நிற்கின்றோன்
ஒத்து, உயிருள் எல்லாம் உடன் உறைவோன் - முத்தனாய்
தெள்ளும் அவன் சொரூப சிந்தனத்தால் விண்டு ஒளிரும்
உள்ளிருந்து உண்மை ஒளி"

(குருவாசகக் கோவை 112)

அநுபந்தம் மூன்றாவது பாடலும் இக்கருத்தையே கூறுகிறது.

*சாதுக்க ளாவார் சகவாச நண்ணினா*
*லேதுக்கா மிந்நியம மெல்லாமு — மேதக்க*
*தண்டென்றன் மாருதந் தான்வீச வேவிசிறி*
*கொண்டென்ன காரியநீ கூறு.*

*(தன்னிடம் வந்து பூரண சரணாகதி அடைந்த பின்னரும், கரும நியமங்களை கஷ்டத்துடன் பின்பற்றி, தன் சிறிய பேத்தியையும் அநுஷ்டிக்கும்படி துன்பப்படுத்திய பக்தைக்கு அறிவுரை கூறுமுகமாக பகவான் கூறியது இது.) ஆத்மாவில் நிலைபெற்றுள்ள சாதுக்களின் உறவு கிடைக்கப் பெற்றால் அதன் பிறகு மற்ற நியமங்கள் எல்லாம் ஒருவனுக்கு எதற்காக? (தேவையே இல்லை) இனிய குளிர்ந்த தென்றல் காற்று வீசிக் கொண்டிருக்கும்போது கையில் விசிறியை வைத்துக் கொண்டு ஏன் விசிறிக் கொண்டிருக்க வேண்டும்? (விசிறி தேவை இல்லை, அதை எறிந்து விடலாம்). அதேபோல, சாதுக்கள் சங்கத்தில் சேர்ந்த பின்னர், பூஜை, ஜபம், தியானம் போன்ற பற்றுக்கள் தேவையில்லை. அவற்றை விட்டு விடலாம், என்கிறார் பகவான்.*

புலன்களுக்கு வசப்பட்ட மனிதன் ஆன்மிக மனிதனாக மாற வேண்டும், எனில், அவன் செயற்பாடுகள் புலன் உந்துதல்கள் இடமிருந்து விடுபடுதல் மட்டுமன்றி, அவனுடைய முழு வாழ்க்கையையும் அறம் சார்ந்த சாதனையாக அமைத்தல் வேண்டும். இந்த அடிப்படையில்தான் மனிதனின் ஆன்மிக போராட்டம் நடைபெற வேண்டும்.

"போக்கும் வரவுமில் பொதுவெளியினில் அருள்
போராட்டம் காட்டு அருணாசலா"

(அக்ஷரமணமாலை)

இந்த ஆன்மிக போராட்டத்திற்கு சில புதுக் கருவிகள் தேவைப் படுகின்றன. இதில் இன்றியமையாதது சத்சங்கம். சத்சங்கம் புத்தியை நெறிப்படுத்தி புத்தியையும் தாண்டிய நிலைக்கு இட்டுச் செல்கிறது.

*"யதா பஞ்சாவதிஷ்டந்தேஜ்ஞானானி*
*மனஸா வஹா புத்திச்ச ந விதேஷ்டிதே"*

*(கட உபநிஷதம் 18)*



*"எப்போது ஞானேந்திரியங்கள் ஐந்தும் மனதுடன் அசையாமல் நிற்கின்றனவோ, புத்தியும் தொழில் அற்றுப்போகிறதோ, அந்நிலையே மிக உயரிய நிலை"*

ஒரு பெரிய காரியத்தைச் செயல்படுத்த ஒரு செயல் கூடமாக மனிதனுடைய அகவாழ்க்கை பரிணாமம் பெறுகிறது.

*"தாமாஹீ பரமாம்கதீம்" (கட உபநிஷதம்)*

இதுவே மெய்ப்பொருள் நிலை. இதனை அடையும் ஏணிப் படியின் ஆரம்பம் சத்சங்கம் (முடிவும் அதுதான்.)

மீண்டும் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்

ராம்மோஹன்

# உயிருள்ள தீச்சுடர்

## மூலம்: நொச்சூர் வேங்கடராமன்
## தமிழாக்கம்: கௌதமன்

‘நான்’ அற்று இருப்பதே
இங்கேயே இப்பொழுதே அனுபவிக்கும் சுதந்திரம்
‘நான்’ அற்று இருப்பதே
மெய்யான ‘தான்’ஆய் இருப்பதாம்.
அதுவே சத், சித், ஆனந்தம்
ஒவ்வொரு துடிக்கும் கணத்திலும்
‘நான்-நான்’ என்னும் உணர்வைக் கவனி.
ஒரு புலி தனது இரையை இடையறாது தொடர்தல்போல்
நானின் ஒவ்வொரு அதிர்வையும் கவனி
முழுக்கவனம் என்னும் பெருந்தழல் கொண்டு
இந்தக் கிளைத்தெழும் நச்சுக் கொடியைப் பொசுக்குக.
முழுக் கவனம் என்பதே மெய்யான ஆன்மாவின்
கதிரியக்கம் பொலியும் ஒளியிழை
அதனை அணைத்துவிட்டால்,
நீ இருப்பது அஞ்ஞான இருளில்
அதற்கு உயிர்கொடு; நீ ஒளியில் உலவுவாய்.
அல்ல, நீயே ஒளியாய் ஒளிர்கிறாய்!
இந்தப் பிரக்ஞை என்றும் அக்னிக் கொழுந்துடன்
கணந்தொறும் கணந்தொறும் வாழ்வாய்.
ப்ரக்ஞை, சாந்தி மற்றும் இருப்புணர்வாய்
உயிருள்ள தீச்சுடராய் நிலவுக!

---


## ரமணோதயம்

Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778

வஸந்தா ராகவன் 9445432335

# அழகு மிளிர் அக்ஷரமணமாலை

**கீதா ரவிச்சந்திரன்**

பகவான் ரமணரை யார்யார் தம் வாழ்வின் பற்றுக் கோடாகக் கொண்டுள்ளனரோ, அவர்கள் அனைவர் உள்ளத்திலும் 'அருணாசல சிவ' என்னும் கீதம் ஒலித்துக்கொண்டே இருக்கும். 'அருணாசல சிவ' என்று மட்டுமே பாராயணம் செய்து கொண்டிருந்த என்னை 15 ஆண்டுகட்கு முன் இந்தப் பல்லவியே அக்ஷரமணமாலையை முழுதும் கற்க ஈர்த்துச் சென்றது. ஆரம்பித்தபின் அதன் பொருளையோ அல்லது அதனுடன் தொடர்புற்ற தத்துவங்களையோ நான் கற்கவில்லை. இந்தத் துதிப்பாடல் பகவானின் இதயத்திலிருந்து பொங்கி எழுந்த ஒன்று என்பதே எனக்குப் போதுமானதாய் இருந்தது. "அடிக்கடி அக்ஷரமணமாலையை நான் சொல்லிக்கொண்டு இருந்தாலே போதும்; ஏதோ ஒரு வழியில் பகவானின் பேரருள் என்னை வந்து கவ்வும்" என்பதே என் திட நம்பிக்கையாய் இருந்தது. இந்த அருட்பொழிவிற்கு நான் தகுதி ஆனவளா என்னும் எண்ணம்கூட எனக்கு எழவில்லை. இது ஒரு மறுக்க இயலாத உண்மை என்பதே என் நம்பிக்கையாய் இருந்தது. பல்லாண்டுகட்குப் பின் இதன் பொருளை நான் கற்க ஆரம்பித்தபோது, என் முன்னால் அது ஓர் அற்புத உலகமாய் விரிந்தது. இறைவனைத் தூற்றுவது; அவன்மீது பொருளற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்துவது; பின்னர் அதற்கான அரைகுறை மன்னிப்புக் கேட்பது; என்னை நீதான் புரக்க வேண்டும் என்று பொறுப்பை அவன்மீது சுமத்துவது - இறைவனை அணுக நம் போன்றோர் கையாளும் எல்லாமுமே அக்ஷரமண மாலையில் விஸ்தாரமாக அழகுற விவரிக்கப் பட்டுள்ளது. இந்தப் பொக்கிஷத்திலிருந்து என்

உள்ளத்தில் நீங்கா இடம் பெற்றுள்ள சில பாடல்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அக்ஷரமணமாலை நாயக-நாயகி பாவத்தில் இறைவனைத் தலைவனாகவும், ஜீவனை அவனது காதல் தலைவியாகவும் சித்தரித்துப் பாடப் பெற்றது. இத்தகைய காதற் பிணைப்பில்தான் சம்பிரதாயமான தடைகள் உடைபடுகின்றன; அறிவுக்கு ஒவ்வாத உரிமைகள் கோரப்படுகின்றன. உணர்ச்சிப் பெருக்கில் தன்னை ஆட்படுத்திக் கொண்டு, நாயகி தலைவனிடம் "என்னைப் புரத்தல் முற்றிலும் உன்கடனே" என்று கூறுகிறாள். இதன் சில எடுத்துக்காட்டுகளை இங்கே காண்போமா:

(i) ஆருக்கா எனை ஆண்டனை அகற்றிடில்
அகிலம் பழித்திடும் அருணாசலா

அருணாசலா! யாருக்காக நீ என்னை வலிய வந்து ஆட்கொண்டாய்? நான் உன்னிடம் வந்தபின் என்னை உதாசீனமாகக் கைவிட்டால் எனில் உன்னை உலகம் பழிக்கும் அல்லவா? (மணமாலை 4)

(ii) இப்பழி தப்புஉனை ஏன்நினைப் பித்தாய்
இனியார் விடுவார் அருணாசலா

அருணாசலா! என்னை ஒதுக்கும் இப்பழியிலிருந்து நீ தப்பித்துக் கொள்வாய். உன்னையே நான் நினைந்து மறுகும்படி செய்தவன் நீயே அல்லவா? இனி உன்னை யார் நழுவ விடப் போகிறார்கள். (மணமாலை 5)

(iii) காந்தம் இரும்புபோல் கவர்ந்து எனைவிடாமல்
கலந்துஎனோடு இருப்பாய் அருணாசலா

காந்தம் இரும்பைத் தன்பால் இழுத்து இருத்திக் கொள்வதுபோல் நீயும் என்னை உன்னிடத்தில் இழுத்து என்றும் பிரிந்து விடாதபடி என்னுடன் கலந்து ஐக்கியமாய் விடு, அருணாசலா. (மணமாலை 16)

இன்றும்கூட ஏன் ஏராளமானவர்கள் பகவானாலும், அருணாசலத்தினாலும் கவர்ந்து ஈர்க்கப்படுகிறார்கள்

என்பது விளக்குவதற்கு இயலாத ஒன்று. வார்த்தைகளால் விவரிக்க முடியாத, பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட பெரும் கவர்ச்சி அது. இதனை பகவானே எடுத்துக்காட்டுடன் விளக்குகிறார். தன்னுடைய கவர்ச்சி எல்லைக்குள் வரும் இரும்புத் துகள்களை காந்தம் தன்னுள் ஈர்த்துக் கொள்வதை ஒப்பதாகும் இது. அருணாசல ரமணன் ஜீவனாகிய நாயகியை தன்னிடம் ஈர்த்துக் கொள்ளும்போது, 'தன்னைப் பாதுகாப்பு ஏதும் அற்றவளாக இதுகாறும் உணர்ந்திருந்த நாயகி, என்னை என்றும் கைவிட மாட்டேன் எனத் தலைவன் உறுதிதர நாடுகிறாள்.' 'எது தனக்கு நன்மை பயக்கும்' என எப்போதும் எடைபோடும் மனப் பழக்கத்தில் இன்றும் சிக்கியுள்ள தலைவி, தான் ஒருவேளை கைவிடப்படலாம் என்று அஞ்சி, இப்போதே அதற்கான பழியைப் பகிர்ந்து அளிக்க ஆயத்தமாகிறாள். ஆனால், இங்ஙனம் சூழ்ச்சியாலும், தந்திரத்தாலும் மாசுபட்டுள்ள பக்திகூட நாயகியை அருணாசலனிடம்தான் அழைத்துச் செல்லும். இறுதியில், இதயத்தாமரை நோக்கி ஜீவனை உள்நோக்கி இழுத்துச் செல்லும் விசையிலிருந்து நாயகி தப்பிக்க இயலாது. கடைசியில், இந்தக் காதற்பிணைப்பு உறுதிப்பட்டு, நாயக-நாயகி பிணைப்பு நிகழ்கிறது.

*(iv) ஈன்றிடும் அன்னையின் பெரிதருள் புரிவோய்*
*இதுவோ உனதருள் அருணாசலா*

*அன்னையைவிட அதிகம் பரிவு காட்டுபவனே! இது அல்லவோ உன் கருணை! (மணமாலை 6)*

*(v) ஔவைபோல் எனக்குன் அருளைத் தந்துஎனை*
*ஆளுவது உன்கடன் அருணாசலா*

*உன்னையே கதி என நம்பி வந்த எனக்கு அன்பில் சிறந்த தாய்போன்று உன்னுடைய அருளைத் தந்து காப்பது உன் கடமையல்லவோ, அருணாசலா. (மணமாலை 14)*

*(vi) முடிஅடி காணா முடிவிடுத்து அனைநேர்*
*முடிவிடக் கடனிலை அருணாசலா*

*ஆரம்பமும் முடிவும் தெரியாத அளவுக்கு சிக்கலான அகந்தை முடிச்சை அன்னையைப்போல் பரிவு காட்டி நீயே அவிழ்த்து உதவக் கடமைப்பட்டவன், அருணாசலா. (மணமாலை 80)*

நாயகிநாயக பாவம் மட்டுமன்றி, அக்ஷரமணமாலை, இறைவனை ஒரு சிறப்பு மிகுந்த அன்னைபோலும் உருவகம் தருவதை இங்குக் காண்கிறோம். ஓர் அன்னையின் பேரன்பு சுயநலத்தால் எழுவதல்ல; அது உள்நோக்கம் கொண்டதல்ல. ஓர் அன்னையின் உள்ளுணர்வால் உந்தப்பெற்ற, அன்பால் வெளிக் கொணரப்பட்ட செயலாகும் அது. அது ஒரு தெய்வீக சங்கீதம்போல் இதயத்திலிருந்து வெளிப்படுகிறது.

அன்னையின் ஒவ்வொரு செயலும் அவளது அருள் வெளிப்பாடே. 'புஷ்டி' என்ற வடமொழிச் சொல்லுக்கு, 'அருள்' என்னும் பொருள் மட்டுமன்றி, 'ஊட்டம்' என்னும் பொருளும் உண்டு. அன்னையின் அருள்தான் குழந்தைக்கு ஊட்டம் தருவது. அன்னையின் எல்லையற்ற அன்பு, தனித்துவம் வாய்ந்தது. ஒரு குழந்தை அன்னையிடம் மூர்க்கத்தனமான கோரிக்கைகளைக்கூட வைக்கும்; அடிக்கடி தன் குறும்புத்தனத்தால் தொல்லையில் சிக்கிக் கொள்ளும். ஒரு குழந்தை, தன்னைச் சிக்கலிலிருந்து விடுவிக்கத் தன் அன்னையைத் தேடித்தான் ஓடும். ஒரு பக்தன் சிக்கலில் மாட்டிக் கொள்ளும்போது ஆரம்பத்தில் தன் சுயமுயற்சி கொண்டே தன்னைக் காத்துக்கொள்ள முயல்கிறான். அது முடியாமல் போகும்போது, தன் இயலாமையினால் தன் அன்பு அன்னையை நாடுகிறான். அவனுக்குத் தெரியும், எப்போதுமே அன்னையின் அன்பு தன்னைக் காக்கும் என்று. ஒரு குழந்தை குரங்குக் குட்டிபோல

தானே அன்னையைப் பற்றிக் கொண்டாலும் சரி, அல்லது ஒரு பூனைக்குட்டிபோல், அன்னையே அதனைத் தானாகப் பற்றி எடுத்துச் சென்றாலும் சரி, அன்னையின் அணைப்பில் இருத்தலே பூரண பாதுகாப்பு என்று அந்தக் குழந்தை அறியும். லலிதா சஹஸ்ரநாமத்தில், லோகமாதா பக்தனின் மனமுடிச்சுகளைக் கட்டவிழ்க்கும் அன்புத் தாயாகப் போற்றப்படுகிறாள். அன்னையின் இந்த எல்லையற்ற, கட்டற்ற அன்பு, பக்தனை மெய்நெறிப்படுத்தி அவனைப் பந்தத்திலிருந்தும் விடுவிக்கிறது.

(vii) சாப்பாடு உன்னைச் சார்ந்து உணவாயான்
சாந்தமாய்ப் போவன் அருணாசலா

பசிக்கு உணவு வேண்டி நான் உன்னிடம் நெருங்கினேன். ஆனால் நீயோ என்னைப் பக்குவமாகப் புசித்து விட்டாய். ஜீவபோதத்தை இழந்து, நான் உன்னோடு கலந்து சாந்தி ஆனேன், அருணாசலா. (மணமாலை 28)

(viii) சிந்தித்து அருள்பட சிலந்திபோல் கட்டிச்
சிறையிட்டு உண்டனை அருணாசலா

உன்னிடம் நான் வசப்பட வேண்டும் என்றே சிலந்திபோல் உன் அருள் வலையைக் கட்டி என்னை அதில் சிறையிட்டுச் சாப்பிட்டு விட்டாய், அருணாசலா. (மணமாலை 103)

ஆன்மிக யாத்திரை முதலில் இப்படி ஒரு பேரத்தில்தான் பெரும்பாலும் துவங்குகிறது. இதனால் நமக்கு என்ன கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பே ஆரம்பத்தில் ஆத்மிக உந்துதலாய் அமைகிறது. எதிர்பார்ப்பு அதிகம் இருக்கும்போது அதில் உற்சாகமும் அதிகமாகிறது. ஆனால், வெகுவிரைவிலேயே இறைவன் இதை ஒரு முடிவுக்குக் கொணர்ந்து விடுகிறான். வேட்டையாடச் சென்றவனே இறுதியில் இரை ஆகிறான்! ஒரு சிலந்தியின் நுண்ணிய வலை, அதனுள்ளிருந்தே வேயப்பட்டு,

இரையினைக் கவ்வும் திறம் வாய்ந்த உபகரணமாய் உள்ளது. இறுதியில் சிலந்தி அந்த வலையையும் சேர்த்தே விழுங்கி விடுகிறது. எப்படி ஒரு சிலந்தி தன்னிலிருந்தே வலையை உண்டாக்கி, அதனைக் காத்துப் பின் தன்னுள்ளேயே ஈர்த்துக் கொள்கிறதோ அதுபோலவே இறைவன் தன்னுள்ளிருந்தே இந்த அகிலம் முழுவதையும் உண்டாக்கி, அதனைக் காத்து, இறுதியில் தன்னில் ஈர்த்துக் கொள்கிறான். ஜீவனின் தனித்துவம் முற்றிலுமாக அழிக்கப்பட்டு வருகிறது. அத்தனைக்கும் அடிப்படை இறையருளே என்பது சாதகனுக்கு மெல்ல உதயமாகிறது.

*(ix) யவன்என் வாயில் மண்ணினை அட்டி*
*என்பிழைப்பு ஒழிந்தது அருணாசலா*

உலகத்தின் ருசி தெரியாதவாறு என் வாயில் மண்ணைப்போட்டு என் பிழைப்பை ஒழித்தது உன்னைத் தவிர வேறு யாராக இருக்கமுடியும், அருணாசலா. (மணமாலை 88)

முந்தைய பாடலில் நாயகி, தனக்கு உணவு கிடைக்கும் என்று எதிர்பார்த்து வந்து, இறுதியில் தானே உணவானதைப் பற்றிப் பாடினாள். இந்தப் பாடலில், நாயகன் அவள் மீது கொண்டுள்ள தீவிரக் காதல் சித்திரிக்கப்படுகிறது. அருணாசலன் பக்தனைத் தூய்மைப்படுத்தும் பேரக்னி. நாயகி, நாயகனது அன்பு வெளிப்பாட்டால் தனக்கு உணவு மறுக்கப்பட்டது மட்டுமின்றி எதையும் உண்ணமுடியாதபடி வாயில் மண் அடைக்கப்பட்ட நிலையை எய்துகிறாள். உலக சம்பந்தப்பட்ட விஷயங்கள் எதுவுமே அவளுள் இனிப் புகாது. அகங்காரமும், ஆணவ வெளிப்பாடும் முற்றிலும் அழிக்கப்படுகின்றன.

*(x) லாபநீ இகபர லாபம்இல் எனைஉற்று*
*லாபம்என் உற்றனை அருணாசலா*

உன்னை அடைந்தோர்க்கு நீ பரிபூரண இன்பப் பொருள் என்றாலோ, இகத்திலும் பரத்திலும் எந்தவித லாபமும்

*இல்லை. அப்படிப்பட்ட என்னை நீ பெற்றதால் அடைந்த லாபம்தான் என்ன, அருணாசலா! (மணமாலை 93)*

*சந்தப் பொலிவு மிக்க இப்பாடலில், ஊசலாடும் நாயகியின் மனஓட்டம், அற்ப விஷயங்கட்கு எல்லாம் அமைதி இழக்கிற நிலையிலிருந்து, தன் தவறுகளை எண்ணி வருந்தி இறைவனின் மேன்மையை உணரும் நிலைக்கு உயர்வதைப் பல்வேறு ராகங்களில் வெளிப்படும் இந்தக் காதல் கீதத்தின் ஆதார சுருதி, அட்சம் ஏதுமின்றி ஒருதலையாக நாயகனுடன் பிணக்கு உறுவதே. நாயகன் எந்த நிலையிலும் தன்னைக் கைவிடமாட்டான் என்ற தைரியத்தினால்தான், நாயகி அவனிடம் தன் நிலையுற்ற தன்மையையும், எளிதில் நொறுங்கிப் போகும் தன் உறுதியற்ற பாங்கினையும், அலைபாயும் மனதையும் வெளிப்படுத்துகிறாள். நாயகனின் பேரன்பினால் இந்தப் பலவீனங்கள் அனைத்துமே மறைந்துவிடும் என்பது அவளுக்குத் தெரியும். 'என்னைப் பெற்றதால் உனக்குப் பயன்ஏதும் இல்லையே' என்று கூறும்போதே, எல்லையற்ற பரம்பொருளுக்கு மேலும் சேர்க்க ஒன்றுமே கிடையாது. அது ஒரு பரிபூர்ணம் என்ற உணர்வையும் நாயகி வெளிப்படுத்துகிறாள்.*

*(xi) வெளிவிட்டேன் உன்செயல் வெறுத்திடாது உன்அருள்*
*வெளிவிட்டு எனைக்கா அருணாசலா*

*நீ எனக்கு அருள் செய்ததை உலகறிய வெளிப்படையாகக் கூறிவிட்டேன். அதற்காக என்னை வெறுக்காமல் உன் அருளைப் பொழிந்து எனைக் காப்பாயாக. (மணமாலை 98)*

*தன் மனப்போக்குப்படி நாயகனைக் காண முற்படுவதின் தவறு நாயகிக்குப் புரிய ஆரம்பிக்கிறது. அவள் நாயகனுடன் பிரிவின்றி ஒன்றிட விரும்புகிறாள். தனக்கு அதற்கான தகுதி இல்லாவிடினும் சரி, நாயகனை அடைந்திடத் தான் எந்த முயற்சியும் செய்யாவிடினும்*

சரி, இறைவன் தன்அருள் பொழிவைக் காட்டவேண்டும் என்பதே அவளது பேரவா. திவ்ய ப்ரபந்தத்தில் ஆண்டாள், நாயகநாயகி பாவத்தின் உதாரணமாய்த் திகழ்பவள், தன்னை ஒரு அறிவற்ற குழந்தைபோல் பாவித்து, 'நான் எனது முட்டாள்தனத்தால் உன்னைச் சிறுமையான பேரிட்டு அழைத்தாலும் கோபங் கொள்ளாதே' என்று பாடுகிறாள் (சிறுபேர் அழைத்ததையும் சீறி அருளாதே')

நாயகி நாயகன் மீது மட்டற்ற காதல் கொள்ளும்போது, அவள் வார்த்தைகளை அளந்து பேசுவதில்லை. தான் படும் துயரத்தையும், தான் அவன் மீது கொண்டுள்ள பேரன்பையும் வார்த்தைகளில் கொட்டி விடுகிறார். அது மட்டுமன்றி, ஒரு சிறுமியின் விளையாட்டுத்தனமும் அக்ஷரமணமாலையில் வெளிப்படுகிறது.

சிவானந்த லஹரியில் சங்கரரின் சுலோகம்தான் நினைவில் எழுகிறது.

க்ரீடார்த்தம் ஸ்ருஜஸிப்ரபஞ்ச மகிலம்
க்ரீடாம்ரு காஸ்தே ஜனா:,
யத்கர்மா சரிதம் மயா ச பவத:
ப்ரீத்யை பவத்யேவ தத்
சம்போ ஸ்வஸ்ய குதூஹலஸ்ய கரணம்
மச்சேஷ்டிதம் நிச்சிதம்
தஸ்மான் மாமக ரக்ஷணம்
பசுபதே கர்த்தவ்ய மேவத்வயா

(சிவானந்த லஹரி, 66)

(சிவபிரானே! இந்த உலகமே உனது விளையாட்டு அரங்கம். அனைத்துப் படைப்புகளுமே உனது விளையாட்டு பொருட்கள். எனது செயல்கள் அனைத்துமே உனது விளையாட்டு மகிழ்ச்சிக்காகவே. எனவே என்னைக் காப்பது உன் கடன்) நம்மைக் காப்பது பகவானின் கடன்.

ரமண சுப்ரபாதம் பாடுகிறது:

உத்திஷ்ட ஸேஷரமண பக்தானாம் மங்களம் குரு

பகவான் ரமணரே! எழுந்திருந்து உங்கள் பக்தர்கட்கு மங்களம் அருள்வீர்.

நமக்கும் பகவானுக்கும் இடையுள்ள பிணைப்பு ஒரு முழுமையான சார்தலாகும். எனவே நாம் பகவானிடம் எம்மை முழுமையாகக் காப்பீர் என வேண்டுவது பொருத்தமான ஒன்றே. பகவானது முழுமையான அருட்குடை நிழல் நம்மைப் புரக்கிறது என்ற உண்மை நமக்கு மிகவும் சுகமான பாதுகாப்பை நல்குகிறது.

[இந்தக் கருத்தாழம் மிக்க கட்டுரையாளர் திருமதி. கீதா ரவிச்சந்திரன், பெங்களூரில் வருமானவரி இணை ஆணையராகப் பணியாற்றியவர்]

## அக்ஷரமணமாலை நூற்றாண்டு விழா

*இவ்வாண்டு அக்ஷரமணமாலை நூற்றாண்டு விழா அனைத்துப் பகுதிகளிலும் ரமண அன்பர்களால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருவது நாம் அனைவரும் அறிந்ததே. அதைப் பற்றிய விவரங்களை நாம் 'ரமணோதயம்' செய்திப்பகுதியில் ஒவ்வொரு இதழிலும் பிரசுரித்து வருகிறோம்.*

*அன்பர்கள் இதுதொடர்பான செய்திகளை தொகுத்து அளித்தால் ரமணோதயத்தில் பிரசுரிக்க உதவியாக இருக்கும்.*

*அக்ஷரமணமாலை கைப்பிரதி, தெளிவுரையுடன் இலவசமாகப் பின்வரும் இடங்களில் கிடைக்கும்:*

*ஸ்ரீ ரமணாச்ரமம், ஸ்ரீ ரமணாச்ரமம் அஞ்சல், செங்கம் சாலை, திருவண்ணாமலை 606603*

*ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை சேவை மையம், 20/12E, புது கடலைக்காரர் வீதி, கோட்டூர் - மலையாண்டிபட்டினம் (PO), பொள்ளாச்சி தாலுக்கா 642 114, கைபேசி: 9965622878*

# கடவுளின் சர்வ வல்லமையைச் சந்தேகிக்காதீர்கள்

## (ஸ்வாமி சிவானந்தரின் உபதேசக் கதையிலிருந்து)

*(இந்தக் கதையின் முதற்பகுதி அக்டோபர் 2013 இதழில் வந்தது. டிசம்பர் இதழில் வந்திருக்க வேண்டிய பிற்பகுதி விடுபட்டுப் போய்விட்டது. வாசகர்களின் நினைவுக்காக முதற்பகுதியின் சுருக்கம்)*

*காபத்வாயா என்ற ஊரில் பிரசித்திபெற்ற பிள்ளையார் கோயில் உள்ளது. வேண்டுவதை எல்லாம் நிறைவேற்றி வைக்கும் வல்லமை பெற்றவர். அந்தக் கோயில் வாசலில் சூர்தாஸ் என்ற குருட்டுப் பிச்சைக்காரன், மிகுந்த பக்தியும் சாந்தமும் நிரம்பியவன். மிகுந்த மனநிறைவோடு சில பிச்சைக் காசுகளிலேயே தனது ஜீவனத்தை நடத்தி வந்தவன். அவனது பரிதாப வறுமையைக் கண்ட பக்தர் ஒருவர் பிள்ளையாரிடம், "இரவு பகலாக உங்களை வழிபட்டு வரும் இந்த ஏழைக்கு நீங்கள் ஏதேனும் செய்யக்கூடாதா?" என்று வேண்ட, பிள்ளையாரும், "அப்படியே! நாளை பகல் பன்னிரெண்டு மணிக்குள் இவனை ஒரு லட்சாதிபதி ஆக்கி விடுகிறேன்!" என்றார். இதனை ஒளிந்திருந்து கேட்டுக் கொண்டிருந்த முராரிலால் என்னும் பேராசை மிக்க பணக்காரன், பிச்சைக்காரனிடம் காலையில் சென்று, "நான் உன் வறுமையைக் கண்டு மனம் பொறுக்காமல், நூறு ரூபாய் தர உத்தேசித்துள்ளேன். இதற்கு மாற்றாக, இன்று பகல் பன்னிரெண்டு மணிக்குள் உன் தட்டில் விழக்கூடிய பணத்தை நான் எடுத்துக் கொள்கிறேன்" என்றான். தனக்கு தினம் வருவது சில காசுகளே என்று எண்ணிய சூர்தாஸ் மகிழ்வுடன் ஒப்புக்கொண்டான்)*

கோயில் வாசல். பிச்சைக்காரன் பிச்சைத் தட்டுடன் அமர்ந்திருந்தான். அவன் தட்டில் எவ்வளவு விழுகிறது என்பதை ஆவலுடன் கோயிலின் ஒரு தூணில் சாய்ந்து கொண்டு முராரிலால் பார்த்துக் கொண்டிருந்தான். நேரம் வேகமாக விரைந்தது. பிச்சைக்காரன் பாத்திரத்திலோ மிகச் சிறு காசுகளே விழுந்து இருநதன. வழக்கமாக விழும் அளவுகூட இல்லை. பிச்சைக்காரனுக்கோ கவலை ஏதும் இல்லை. ஏனெனில் அவனுக்குத்தான் நூறு ரூபாய் சுளையாகக் கிடைத்து விட்டதே! ஆனால் லாலுக்கோ பொறுமை கடந்து கொண்டிருந்தது. நிஜமாகவே பன்னிரண்டு மணிக்குள் ஒரு லட்ச ரூபாய் கிடைக்குமோ? அல்லது பிள்ளையார் தன்னை ஏமாற்றப் பார்க்கிறாரா?

மணி 12 ஆக சிறிது நேரமே இருந்தது. அந்த சில மணித்துளிகளுக்குள் ஒரு லட்ச ரூபாய் பிச்சைக்காரன் தட்டில் விழும் சாத்தியக்கூறே இல்லை. முராரிலால் சேட்டின் பதைபதைப்பு எல்லை மீறியது. கோபம் மிகுந்த நிலையில் கோயிலின் கருவறையில் நுழைந்து பிள்ளையாரின் விக்ரகத்தின் முன்னே நின்று கத்தத் தொடங்கினான். "நீ ஒரு ஏமாற்றுக்காரன்! உன்னை நம்பி நூறு ரூபாயை இழந்து விட்டேனே!" என்று கூக்குரலிட்டு அலறினான்.

என்ன ஆச்சரியம்! சேட்டின் முட்டிக் கை விநாயகரின் சுருண்ட துதிக்கையில் பட்டது. அடுத்த கணமே, சுருண்டிருந்த துதிக்கை நீண்டு, சேட்டின் கையை வலுவாகப் பற்றிக் கொண்டது. துதிக்கையின் வலிய பிடியில் சிக்கிய சேட், எவ்வளவு முயன்றும் கையை விடுவிக்க முடியவில்லை. அவன் கையை விடுவிக்க முயல, முயல பிடியின் இறுக்கம் அதிகமானது. விக்கிரகத்தின் அருகில் சேட் இழுக்கப்பட்டவுடன் விநாயகரின் நாலு கரங்களும் அவனை வலுவாகப் பற்றின. துதிக்கை அவன் கழுத்தை வளைக்கத்

தொடங்கியது. முராரிலாலுக்கு மூச்சுத் திணற ஆரம்பித்தது. அப்போது விநாயகரின் குரல் அவன் செவியில் ஒலித்தது.

"முராரி! உன் உயிரை நீ காப்பாற்றிக் கொள்ள எண்ணினால், இங்கிருக்கும் அன்பர் கஜானன்தாஸிடம் உடனே ஒரு சீட்டு கொடுத்தனுப்பு. உன் வீடு அருகில்தான் உள்ளது. உன் மனைவிக்கு அனுப்பும் அந்தச் சீட்டில் உடனே ஒரு லட்ச ரூபாய் கொண்டு வரச் சொல். ஒரு லட்ச ரூபாயை சரியாகப் பன்னிரண்டு மணி அடிப்பதற்குள் பணம் இங்கு வந்து சேர வேண்டும். இல்லையேல் உன் உயிர் போய் விடும் என்று எழுதி அனுப்பு" என்றார் விநாயகர்.

இந்த வார்த்தையைக் கேட்ட முராரிலால் திடுக்கிட்டான். என்ன செய்வது என்று தெரியவில்லை. வினாடிக்கு வினாடி துதிக்கையின் பிடி இறுகி, மூச்சு திணறத் துவங்கியது. உயிர் போகும் தறுவாயில் இருந்த முராரிலாலின் கழுத்திலிருந்து துதிக்கையைச் சற்றே தளர்த்தினார் விநாயகர். உடனே ஒரு காகிதத்தில் தன் மனைவிக்கு உடனே ஒரு லட்ச ரூபாய் கொடுத்தனுப்புமாறு எழுதினான் முராரிலால். கஜானன்தாஸ் அதைக் கொண்டுபோய் முராரிலாலின் மனைவியிடம் கொடுத்தார். அதைக் கண்டு பதறிய முராரிலாலின் மனைவி, அவரிடம் ஒரு லட்சம் ரூபாய் தர, அதைக் கொணர்ந்து முராரிலாலிடம் கொடுத்தார் அவர்.

"முராரிலால்! சூர்தாஸைக் கூப்பிட்டு இதை அவனிடமே கொடு. அப்பொழுதுதான் உனக்கு விடுதலை" என்றார் பிள்ளையார்.

முராரிலாலும் அவ்வாறே செய்தான். சூர்தாஸிடம் பணம் கொடுக்கப்பட்டவுடன் முராரியின் கழுத்தைச் சுற்றிய துதிக்கையை தளர்ந்து நீங்கியது. சேட்

தப்பித்தோம் பிழைத்தோம் என்று வீட்டிற்கு ஓடிப் போனான். அதே சமயம் சூர்தாஸும் கண் பார்வை பெற்றான். இறைவனின் பேரருளால் பெருஞ்செல்வம் பெற்ற சூர்தாஸ் அதனை அடியார்களைப் பராமரிப்பதிலேயே செலவழித்து முக்தி அடைந்தான்.

சர்வ வல்லமை படைத்த வல்லவர் இறைவன். அவரது வழிகளை நம்மால் ஊகிக்கவே முடியாது. அவரை உறுதியாக நம்புபவர்க்கு அவர் அருள் பொழியும் என்பது நிச்சயம்.

# இனிவரும் திருநாட்கள் - 2014

| | | | |
|---|---|---|---|
| மே | 22 | வியாழன் | மகாபூஜை |
| ஜூலை | 9 | புதன் | பசு லட்சுமி தினம் |
| | 11 | வெள்ளி | குரு பூர்ணிமா |
| செப்டம்பர் | 1 | திங்கள் | அருணை விஜய தினம் |
| | 25 | வியாழன் | நவராத்திரி தொடக்கம் |
| அக்டோபர் | 2 | வியாழன் | சரஸ்வதி பூஜை |
| | 4 | சனி | விஜயதசமி |
| நவம்பர் | 27 | வியாழன் | கார்த்திகை தீப விழாத் தொடக்கம் |
| டிசம்பர் | 5 | வெள்ளி | கார்த்திகை தீபம் |

## ரமணோதயம் காப்பு நிதி

## தொடரும் நன்கொடையாளர்கள்

| | | |
|---|---|---|
| திரு | M.S. வித்யாசங்கரன், சென்னை 4 | 1000 |
| திரு | S. கணேசன், சென்னை | 1000 |

# பிறந்த இடத்திற்கே போய்ச் சேருவோம்!

### சேலம் சேதுகுமரன்

மனம் என்பது என்ன? சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்: "ஒவ்வொரு மனமும் பரந்துபட்ட பிரபஞ்ச மனதின் ஒரு பகுதியே ஆகும். குறிப்பிட்ட சில பிரபஞ்ச நியதிகட்குக் கட்டுப்பட்டே ஒவ்வொரு தனி மனமும் செயல்படுகிறது. அனைத்து மனங்களும் ஒரே தன்மை உடையன; அவை ஒரே மனத்தின் பகுதிகள். ஒரு பிடி மணலை அறிந்தவன் பிரபஞ்சத்தில் உள்ள மணல் முழுவதையும் அறிந்தவன் ஆகிறான். தன் மனத்தை அறிந்து அடக்குபவன் பிரபஞ்சத்தில் உள்ள தனி மனங்கள் ஒவ்வொன்றையும் பற்றிய ரகசியத்தை அறிகிறான். ஒவ்வொரு மனத்தையும் அடக்க வல்லவன் ஆகிறான்" என்கிறார்.

எப்படி மனத்தை அடக்க முடியும்? தியானம் அல்லது மன ஒருமைப்பாடு மூலம். தியானம் செய்ய நாம் அமர்ந்தவுடன் நாம் நாமாக இல்லாமல் பலராக இருப்பதையே காண்கிறோம். நம் மனம் பல உணர்ச்சிக் கூறுகளாகப் பிளவுபட்டு, நாமும் அந்தப் பிரிவுகளுடன் இணைந்து பலராகச் செயல்படத் துவங்குகிறோம். ஏன் இப்படி நிகழ்கின்றது என்றால், நமது பலமுகப்பட்ட வாழ்க்கையே இதன் காரணம். ஒரு நாளில் நாம் காலையில் எழுந்ததுமுதல் தூங்குவதுவரை பல்வேறு வித வேடங்களைத் தரிக்கிறோம். நாம் தியானத்தில் ஈடுபட முயலும்போதும் இந்தத் தன்னறிவின் தொடர்பு அற்ற நிலையே (disassociation of Self-awareness) நீடிக்கிறது. இந்த வேடங்களா நான் என்று உள்முக நோக்கம் தேடலில் இறங்கும்போது, இவை அனைத்தும்

'நான்' என்ற ஓர் ஆதார உணர்வில் இணைக்கப்பட்டு இருப்பதைக் காண்கிறோம். 'நான்' என்னும் இந்த மூல உணர்வே நாம் ஒவ்வொரு நாளும் ஏற்கும் அத்தனை வேடங்களையும் இணைத்து அந்தப் பல்வேறு வேடங்களுக்கு ஏற்படும் அத்தனை அனுபவங்களையும் தொகுத்து, நம்மை 'நாமாக' உணரச் செய்கிறது.

மனோநாசமே மோட்சம். எல்லாப் பயிற்சிகளின் நோக்கமும் மனத்தை அடக்கி அழிப்பதே. பகவானது 'நான் யார்?' என்னும் ஆன்ம விசாரம் மனத்தை நாசமாக்கும்.

எண்ணங்களே மனம் யாவினும் 'நான்'எனும்
எண்ணமே மூலமாம் உந்தீபற
யானாம் மனம்எனல் உந்தீபற

மனத்தின் உருவை மறவாது உசாவ
மனம்என ஒன்றிலை உந்தீபற
மார்க்கம்நேர் ஆர்க்கும்இது உந்தீபற

(உபதேச உந்தியார்)

பகவான் தனது மதுரை மரணானுபவத்திற்குப்பின், ஆத்ம சாட்சாத்காரம் பெற்றபின் கூறுகிறார். என் மனதின் மேல்தளத்தில் பல்வேறு எண்ணங்கள் வந்துபோய்க் கொண்டு இருந்தாலும், சங்கீதத்தின் ஆதார ஸ்ருதியாய் ஒன்றே ஒன்று இடையறது ஒலித்துக்கொண்டு இருப்பதுபோல், இந்த மாறாத 'நான்' என்றும் மாறாத உணர்வு ஆதார ஸ்ருதியாய் என் ஆழ்மனத்தே இடையறாது ஒலித்துக்கொண்டே இருந்தது". ப்ரஸ்ன உபநிடதமும் இதே கருத்தைக் கூறுகிறது. "சக்கரத்தின் மைய அச்சில் அதன் ஆரங்கள் இணைக்கப்பட்டு இருப்பதுபோன்று வாழ்க்கையின் மைய அச்சாகிய 'நான்' என்னும் உணர்வில் நிகழ்வுகள் அனைத்தும் இணைக்கப்பட்டு உள்ளன" (ப்ரஸ்ன உபநிடதம் 6.6).

பகவான் கூறுகிறார்: "இந்த தேகத்தில் நான் என்று கிளம்புவது எதுவோ அதுவே மனம். நமக்குத் தோன்றும் எல்லா நினைவுகட்கும் முதல் நினைவு நான் என்னும் நினைவே. மற்றெல்லா நினைவுகளிலும் இந்த நான் என்னும் நினைவு கலந்து இருக்கிறது. நினைவே மனம். நினைவுகளைத் தவிர மனம் என்றொரு பொருள் தனியாக இல்லை. எல்லா நினைவுகளையும் நீக்கிப் பார்க்கும் போது மனம் என்று ஒன்றும் இருக்கக் காணோம்! இந்த மனம் 'நான் யார்?' என்ற விசாரத்தினால் மட்டும்தான் அழிபடக் கூடியது. விசாரத்தினால் சகல நினைவுகளும் ஒழியவே மனம் அழியும். 'நான்' என்னும் நினைவைப் பின்தொடர்ந்து சென்றால் அது மற்ற நினைவுகள் எல்லாவற்றையும் அழித்துத் தானும் அழியும்; பிணம் சுடுதடிபோல, பிற எண்ணங்கள் எழுந்தால் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு எத்தனியாமல் 'அவை யாருக்கு உண்டாயின?' என்று விசாரிக்க வேண்டும். எத்தனை எண்ணங்கள் எழுந்தாலும் என்ன? ஜாக்கிரதையாக ஒவ்வொரு எண்ணமும் கிளம்பும்போதே 'இது யாருக்கு உண்டாகின்றது' என்று விசாரித்தால் 'எனக்கு' என்று தோன்றும். உடனே 'நான் யார்' என்ற விசாரத்திற்கே திரும்பி ஆழ்ந்து மூழ்க வேண்டும்" என்று பகவான் விளக்குகிறார்.

இது மேலெழுந்தவாரியாக 'நான் யார்' என்று வாயால் கேட்டுக் கொண்டிருக்கு வேலையல்ல. பகவான் உள்ளது நாற்பது 29ஆவது பாடலில் குறிப்பிடுகிறார்:

நானென்று வாயால் நவிலாதுஉள் ஆழ்மனத்தால்
நான்என்றுஎங்கு உந்தும்என நாடுதலே ஞானநெறி

'நான்' என்று வாயால் சொல்லாமல் மனதின் உள்ளே ஆழ்ந்து 'நான்' என்னும் சைதன்ய உணர்வு எங்கிருந்து கிளம்புகிறது என்று நாடுவதே ஞான நெறியாகும்' என்று விளக்குகிறார் பகவான். "வாக்கில் மௌனம், மனதின் மௌனம் இந்த இரண்டோடும் உள்ளத்தில் ஆழ்கின்ற

மனத்தால் அகந்தையின் மூலமாகிய 'நான்' என்பது எங்கிருந்து தோன்றுகிறது என்பதை அறிவதே ஞானநெறி" என்பதாம் இது. தியானத்தைப் பற்றி ஆங்கிலேய பக்தர் ஹம்ஃப்ரீஸிடம் "வழியைத் திறந்து கொண்டே மனத்தை (உபகத்தினைப்) பார்ப்பவனைப் பார்ப்பதிலேயே உள்முகப்படுத்தி ஊன்ற வேண்டும். பார்க்கும் அது தன்னுள்ளேயே உள்ளது. அது எளிதாகப் பற்றக்கூடிய குறிப்பிட்ட உருவமல்ல. சாதாரண மக்களுக்கு அதனைக் காணப் பல்லாண்டு செல்லலாம். ஆயினும் ஒரே நோக்கத்துடன் அதனை நாடினால் நாலைந்து மாதங்களிலேயே மனச் சாந்தியும், துயர்களை மத்யந்த தன்மையும் தன்னையறியாமலேயே ஒரு பெரும் சக்தியும் பிறக்கும், ஆதலின் இப்பொழுது முதலே இச்சாதனையில் ஈடுபடுக" என்றார் பகவான்.

இந்த விசாரப் பாதையில் இரண்டு கேள்விகள் பிறக்கின்றன. 'நான் யார்' என்பது ஒன்று; 'நான் எங்கிருந்து?' என்பது இரண்டாவது. 'நான்' என்னும் ஜீவபோதமே மனம். 'நான்' என்கிற உணர்வான இந்த மனம் எங்கிருந்து உதிக்கிறது என்று தேடவேண்டும் என்கிறார் பகவான். ஆழ்ந்த உறக்கத்தில் மனம் இல்லை. நாம் விழித்து எழும்போது மனமும் எழுகிறது. இது எங்கிருந்து எழுகிறது என்று ஆய்வது இரண்டாவது விசாரணை. இதனை பகவான் அருணாசல பஞ்சகத்தில் விளக்குகிறார்.

"அகமுகமார் அந்த அமலமதி தன்னால்
அகம்இதுதான் எங்குஎழும்என்றுஆய்ந்தே - அகஉருவை
நன்குஅறிந்து முந்நீர் நதிபோல ஓயுமே
உன்கண் அருணாசலனே ஓர்."

"உள்முகமாப்பட்ட பரிசுத்தமான அறிவால் நான் என்னும் இந்த ஜீவபோதம் எங்கிருந்து எழுகின்றது என்று ஆராய்ந்து, உண்மையான தன் ஆத்ம ஸ்வரூபத்தினை நன்றாய் உணர்வோன், கடலில் கலக்கு

நதிபோல, அருணாசலனே, உன்னிடம் ஒடுங்கி விடுவான். 'நான்' என்பது 'நானே', என விளங்குவது ஆன்மா. 'நான் என்பது தேகம்' என்று குழம்பிக் கிடப்பது மனம். இந்த இரண்டு நிலையிலுமே 'நான்' என்பது உள்ளது. ஆனால் குறிக்கப்படுவதோ வெவ்வேறு. தன்னை விஷய வஸ்துக்கள், ஜீவன் என்று தவறாக எண்ணுவது மனம். தன்னைத் தானாகவே உணர்வது ஆத்மா

தானே தானே தத்துவம் இதனைத்
தானே காட்டுவாய் அருணாசலா

(அக்ஷரமணமாலை)

மனம் எழுவது ஆன்மாவில் இருந்தே. எனவே மனம் எங்கிருந்து எழுகிறது என்பதை நாடினால் அம்மனம் ஒடுங்கி ஆன்மா பிரகாசிக்கும்.

"நான்என்று எழும்இடம் ஏதுஎன நாடஉள்
நான்தலை சாய்ந்திடும் உந்தீபற
ஞான விசாரம்இது உந்தீபற

அகங்காரம் - ஆணவம் - தன் முனைப்பு உண்மையில் இல்லாதது; ஆனால் இருப்பதுபோல் தோன்றுவது. இருப்பதுபோல் தோன்றும் அதை 'எது?' 'எங்கு உள்ளதாகத் தோன்றுகிறது?' என்னும் இரு விசாரங்கள் மூலம் ஆய்ந்தால் அது இல்லவே இல்லை என்பதை அறிவோம். அதன் இல்லாமையை நாம் அனுபவித்து அறிய வேண்டியே பகவான் இந்த விசார மார்க்கத்தை உபதேசிக்கிறார்.

நாம் ஆரம்பத்தில் கண்டபடி மனதின் எல்லா ஆற்றல்களும் பிரகிருதிக்கு உரியவை. ஆனாலும் இந்த இயற்கையில் ஆற்றலை எல்லோரிடமும் ஒரே அளவில் வெளிப்படுவதில்லை. அறிவு, ஆற்றல், திறமை, உணர்ச்சிகள், பண்பு இவை அனைத்துமே மனிதனுக்கு மனிதன் வேறுபடுகின்றன. இது ஏன்? இதன் விடையை பதஞ்சலி யோக சூத்ரத்தில் கூறுகிறார். உயிர்களின்

*பரிணாமம் பிரகிருதியின் உள்நிறைவால் ஏற்படுகிறது. வயலுக்கு நீர் பாய்ச்ச விரும்புகின்ற விவசாயி வரப்பில் உள்ள அடைப்பை மட்டுமே நீக்குகிறான். தண்ணீர் தானாக வயலில் பாய்கிறது. அதுபோலவே பிரகிருதி வெளிப்படுவதில் உள்ள தடைகளை நீக்குவதில் மட்டுமே மனித முயற்சி தேவை. ஆற்றல் அல்லது தெய்வீகம் பின்னர் தானே வந்து வெளிப்படும் (யோக சூத்ரம் 4.2.3)*

*தங்கள் அருள் எப்போது எனக்கு வாய்க்கும்? என்ற அன்பருக்கு "அருள் எப்போதும் இடைவிடாது பாய்ந்து கொண்டேதான் இருக்கிறது. நீங்கள் குறுக்கே வராமல் இருந்தால் போதும்!" என்று பகவான் விடையிறுத்தார் அல்லவா! "இருந்தபடி இருங்கோள்! முருகன் அருள் வந்து தானே வெளிப்படும்!" என்று கந்தர் அலங்காரத்தில் அருணகிரிநாதரும் அறுதியிட்டுக் கூறுகிறார்.*

*இந்த யோக சூத்ரத்தை விளக்கும்போது ஸ்வாமி விவேகானந்தர் கூறுகிறார்: "பாசனத்திற்கான நீர் வாய்க்காலில் ஏற்கெனவே இருக்கிறது; ஆனால் தடைபட்டிருக்கிறது. தடையை நீக்கியவுடன் புவியின் ஈர்ப்பு ஆற்றலுக்கேற்ப வெள்ளம் தானாகப் பாய்கிறது. அதுபோலவே எல்லா ஆற்றல்களும் வாய்ப்புகளும் மனிதனுள் ஏற்கெனவே உள்ளன. பூர்ணத்துவம் அல்லது நிறைநிலை என்பது மனிதனின் இயல்பு. இவை வெளிப்பட முடியாமல் தடுக்கப் பட்டிருக்கின்றன. தடையை நீக்குபவனிடம் "பிரகிருதி நிறைந்து பாய்கிறது" சுயேச்சை (will) ஆற்றல் (strength) இரண்டுமே ஆன்மாவிடம் உள்ளது. யோக சாஸ்திரங்கள் ஆன்மாவை சித்-சக்தி (உணர்வு-ஆற்றல்) என்றே குறிப்பிடுகின்றன. நம்மை நாமே அறிவதைத் தடுப்பது மனமே. மனதைக் கட்டுப்படுத்த மனதால் முடியாது. அதை விட உயர்ந்த ஆன்மாவினால்தான் அது இயலும். இது செயல்படும் விதமே ஆன்ம விசாரம்.*

ஒருவர் ஸ்ரீபகவானிடம் "நாம் செய்யும் வேலைகள் தியானத்திற்குத் தடையாகாதா?" என்று கேட்டார். அதற்கு பகவான் "எந்த வேலையும் உன்னதல்ல என்ற எண்ணம் எப்போதும் உன் திருஷ்டியில் இருந்தால் அதுவே போதும். இதை ஞாபகப்படுத்திக் கொள்ள முதலில் பிரயத்னம் தேவை. பிறகு இது இடைவிடாமலும் சஹஜமாயும் இருக்கும். வேலையும் நடந்துகொண்டு இருக்கும். உன் சாந்திக்கும் பங்கம் இருக்காது. தியானமே உன் இயற்கை நிலை. வேறு எண்ணங்கள் தடை செய்வதால் அதை தியானம் என்கிறாய். இவ்வெண்ணங்கள் ஒழிந்த பின்னர் நீ தனித்திருக்கிறாய். அதுவே சிந்தையற்ற சமாதிநிலை. இந்த உண்மை நிலையை இதர சிந்தனைகளை நீக்கி மீண்டும் அடைய முயல்கிறாய். அவ்வாறு அப்புறப்படுத்தலே இப்போது தியானம் எனப்படுகிறது. இப்பழக்கம் உறுதியானால் 'இருந்தபடி இருங்கோள்' என்று அருணகிரியார் குறிப்பிடுவதும் இதையே.

"நான் என்று எழுமிடம் ஏது ? என்று நாட ஆரம்பித்தால் முன்னிலை படர்க்கைகளை நாடுகின்ற சுபாவமுடைய இன்னார் என்ற மாயையின் பகுதி தன் சுபாவம் இழந்து வலுவிழந்து ஒடுங்கி மறைய வேண்டி வருகிறது. இதுவே 'நான் தலை சாய்வது'.

இவ்விசாரத்தால் 'இன்னாராக' என்ற உபாதி மறைந்து நான் தானாகவே இருக்கிறேன் என்ற ஒரு தன்னுணர்வு அனுபவம் ஆகும்.

'தானாகத் தோன்றல்' இதுவே. இதுவே ஆன்ம தரிசனம் (சாது ஓம் சுவாமியின் விளக்கம்)

பகவான் கூறுகிறார்: "நான்" என்னும் நினைவு தேகத்தின் முதலில் எந்தஇடத்தில் தோன்றுகிறது என்று விசாரித்தால் 'ஹ்ருதயத்தில்' என்று தெரியவரும். அதுவே மனதின் பிறப்பிடம். 'நான் நான்' என்று கருதிக்கொண்டு

இருந்தாலும்கூட அவ்விடத்திலே கொண்டு போய்விடும். மனதை இடைவிடாமல் இதயத்தில் வைத்திருப்பதே அந்தர்முகம். அல்லது உள்முகம். இதயத்தில் தங்கவே எல்லா நினைப்புகட்கும் மூலமான நான் என்பதுபோய், எப்போதும் எல்லா நினைப்புகட்கும் ஆதார ஸ்ருதியான தான் என்கிற ஆத்மா மாத்திரமே ஸ்புரணமாய் - அதிர்வாய் - தோன்றும் அந்த ஸ்புரணத்தைப் பற்றியிரு. இறுதியில் அந்த அதிர்வும் அடங்கிப்போய் ஆத்ம தரிசனம் பூரணமாகும். இதுவே ரமண வழி.



## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2014

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மே | 14 | புதன் | அதிகாலை 2.00 | 15 | வியாழன் | அதிகாலை 1.45 |
| ஜூன் | 12 | வியாழன் | பகல் 12.45 | 13 | வெள்ளி | காலை 10.30 |
| ஜூலை | 11 | வெள்ளி | பகல் 12.45 | 12 | சனி | மாலை 5.55 |
| ஆகஸ்டு | 10 | ஞாயிறு | அதிகாலை 3.20 | 11 | திங்கள் | அதிகாலை 1.10 |

# ரமண மஹா ஸமுத்திரத்தில் நானும் ஒரு துளி ஆவேனோ?

**பிர. கிரிதர ஜகதீஷ்**

வானரக் கூட்டத்தில் ஆஞ்சனேயர் அதி உத்தமம். வாலியோ முழு தமோ குணப்ரதானம். சுக்ரீவனோ இரண்டும் கலந்த இயல்புடையவன்.

மனிதர்களில் தன்னை உணர்ந்த மஹாத்மாக்கள் ஆஞ்சனேயரின் அம்சமாகத் திகழ்கிறார்கள்! சீதா ராமருக்கு இடையே ராமதூதராக மாருதி விளங்கியதைப் போல ஜீவாத்மாவிற்கும், பரமாத்மாவிற்கும் இடையே ஒரு பாலம் போன்று மகான்களின் ஜீவிதம் இடம் பெறுகிறது.

இனி உலகியல் மக்களோ வாலியின் அம்சம். அவர்களிடம் தர்மத்தை எதிர்பார்க்க முடியாது. புலன் இன்பம் ஒன்றே உலகியலின் கொள்கை. அதற்கு மேல் அங்கே பேசுவதற்கு ஒன்றுமில்லை. இனி மூன்றாவது வகை மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் ஆத்மசாதகர்கள். வானர அரசன், வாலியின் இளவல் சுக்ரீவனின் அம்சமாக இவர்களைக் கூற வேண்டும்.

சுக்ரீவனிடம் தர்மமும், அதர்மமும் கலந்து கிடந்தது. சத்யம் அசத்யம் குறித்த ஞானமும் ஓரளவு இருந்தது. அவனிடம் தர்மம் இருந்ததால் தர்மத்தை நிலைநாட்ட ஸ்ரீராமரிடம் தஞ்சம் அடைந்தான். ஆனால் வாலியை வதம் செய்து ஆட்சியை ஏற்றதும் கடமையை மறந்து மதுவிற்கு அடிமையாகி தர்மத்தை மறந்தான். லக்ஷ்மணனால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு நிதானத்திற்குத் திரும்பி ராம கார்யத்தில் மீண்டும் பிரவேசித்தான்.

ஆத்ம சாதகர்களாகிய நாமும் சுக்ரீவனைப்போல இரண்டு ஆளுமைப் பேருடையவர்களாக இருந்து வருகிறோம். தர்ம அதர்ம, சத்ய அசத்யங்களுக்கிடையே ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறோம். ஆகவே இதற்குரிய தீர்வும், பக்தி, ஞானம் என்ற இரண்டு வகையில் வழங்கப்படுகிறது.

ஆத்ம லாபத்தை அடையும் லக்ஷியத்தில் விசாரம், ஸரணாகதி என்ற இரண்டு பெரிய கருத்துக்கள் பேசப்படுகின்றன.

பகவான் ரமணர் ஆத்ம விசாரம், ஆத்ம ஸமர்ப்பணம் என்கிற தத்துவ பிரயோகத்தை வெகுவாக தமது உபதேசத்தில் கையாண்டு இருக்கிறார். விசாரம் என்றால் தன்னை யார் என்று அறியும் உண்முகத்தேடல், அதாவது ஞானவழி. ஸமர்ப்பணம் என்றால் இறைவனிடம் தன்னை முழுவதுமாக ஒப்படைத்தல், பக்தி மார்க்கம்.

பக்தி மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் ஆன்மிக உலகம் பெரும்பாலும் இவ்விதத்தில்தான் அறிந்துள்ளது.

தொலைதூர மலைக்கிராமங்களில் மினுக் மினுக் என்று எரியும் மங்கிய தீப ஒளியைப் போல இவ்விரண்டு கருத்துக்களில் மங்கிய அறிவே (Vague Knowledge) காணப்படுகிறது.

பகவான் ரமணரின் போதனைகள் ஆயிரம் கோடி சூரிய பிரகாசத்தை ஒத்தது. அதற்கு மேற்கொண்டு விளக்கம் தேவையில்லை. ஆயினும் ஒரு சூரியனையே நேரில் பார்க்க நம் கண்களுக்குச் சக்தியில்லை. பிறகு ஆயிரம் கோடி சூரிய பிரகாசத்தை அல்பக்ஞர்களாகிய நம்மால் எப்படி தரிசிக்க முடியும்!

பிரம்மநிஷ்டனின் போதனைகள் மிகவும் ஆழமானவை. அதற்குள் இறங்குவதற்குமுன் அதிக ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது.

சாஸ்திரங்களில் க்யாதிவாதம் என்ற ஒரு விசாரம் மிகவும் விஸ்தாரமாகச் செய்யப்பட்டுள்ளது. க்யாதி என்றால் தவறு (Mistake). தவறு எப்படி நடந்தது? நாம் செய்த தவறு என்ன? நம்முடைய ஸ்வரூபத்தை இழந்தது எப்படி? என்கிற ஆராய்ச்சி வெகு ஆழமாக அங்கே செய்யப்படுகிறது. காரணம் தவற்றுக்குரிய காரணத்தைக் கண்டுபிடித்தால் தீர்வை வெகு எளிதாகப் பெற்று விடலாம்.

நோய்க்குரிய காரணம் கண்டறியப்பட்டால் அதற்குரிய மருந்தைச் சுலபமாகச் சொல்லி விடலாம் அல்லவா?

விசாரத்தின் முடிவாக, ஜீவன் செய்த தவறு, 'தற்கவனம் இன்மை', தன்னுடைய யதார்த்த ஸ்வரூபத்தை மறந்ததால் ஸம்ஸாரத் துயரம் வந்திருக்கிறது; மீண்டும் தற்கவனத்தைப் பெறுவதால் ஸம்ஸாரத் துயரத்திலிருந்து விடுதலை சிந்திக்கிறது என்று நிர்ணயம் செய்யப் படுகிறது?

இனி பொறுப்பு முழுவதையும் என் தோள்களில் வைத்துக் கொண்டு நேராக விசாரத்தில் ஈடுபடுவதா? அல்லது பொறுப்பனைத்தையும் ஈசனிடம் ஒப்படைத்து அமைதியுற்றிருப்பதா? எது உத்தமம்?

விசாரமா? ஸரணாகதியா?

ஸரணாகதி எளிதாகத் தோன்றுகிறது. அதையே தேர்ந்தெடுப்போம் என்றால், நம்முடைய தன்முனைப்பு (Ego) அவ்வளவு எளிதில் ஸரணாகதி ஆகாது. வாமன அவதாரத்தில் பலிச் சக்கரவர்த்தியிடம் பகவான் மூன்று அடி மண் கேட்டார். முதல் அடியில் மண்ணுலகத்தையும், இரண்டாம் அடியில் விண்ணுலகத்தையும் அளந்து மூன்றாவது அடிக்கு இடம் எங்கே என்று பகவான் கேட்க, பலிச் சக்கரவர்த்தி என் தலைமேல் வையுங்கள் என்று கூற, பகவான் அவன் சிரத்தில் பாதம் பதித்து அவனைப் பாதாளத்திற்கு அனுப்பினார் என்று பாகவதம் கூறுகிறது.

இங்கே சிந்திக்க வேண்டும். மண்ணுலகத்தையும், விண்ணுலகத்தையும் அளக்கும்பொழுதே பலிச் சக்கரவர்த்தியின் தலையும் அதற்குள் அடக்கம்தானே! பிறகு எப்படி மூன்றாவது அடியை தன் தலைமேல் வைக்கும்படி அவனால் கூற முடிந்தது என்றால், இந்த நான் என்கிற அஹங்காரம் என்பது விண்ணுலகத்தையும், மண்ணுலகத்தையும் தனக்குள் அடக்கிக் கொண்டு பிரம்மத்திற்கு நிகராக ஸர்வ வியாபியாம், பொய்யாய், விரிந்து பரந்து நிற்கிறது. அதனால்தான் ஜீவனை சாஸ்த்ரம் 'சிதாபாஸன்' [சித்+ஆபாஸன் = சித்தின் நிழல்] என்று கூறுகிறது. ஆகவே மாயா கார்யமான இந்த அஹங்காரம் அவ்வளவு சுலபமாகச் ஸரணாகதி அடையாது.

சரி. விசாரமார்க்கத்தில் ஈடுபடலாம் என்றாலோ ஸுபுத்தி இல்லை. புத்தியில் தெளிவு இல்லை. புத்தியில் மோஹம் படர்ந்திருக்கிறது.

அக்கினிக் கட்டுப்பட்டால் அற்பமும் சுடமாட்டாது.

மக்கின ஞானத்தாலே வந்த பந்தமும் வேகாது - கைவல்ய நவநீதம்

நம்மிடமுள்ள ஞானமோ மக்கின ஞானம். சத்யத்தைக் குறித்த நாட்டம் சிறிதாகவும், அசத்யத்தைக் குறித்த ஓட்டம் பெரிதாகவும் இருக்கிறது. இந்நிலையில் ஆத்ம விசாரத்தை நம்மால் செய்ய முடியுமா?

பகவான் ரமணரை அழைப்போம். நிச்சயம் வழி கிடைக்கும். பகவான் ரமணர் கூறுகிறார்:

"விபக்தி [பாகுபாடு, பிரிவு] உள்ளமட்டும் பக்தி வேண்டும். வியோகம் இருக்கும் வரையில் யோகம் வேண்டும். த்வைத புத்தி உள்ள மட்டும் பகவானும், பக்தியும் இருந்தேயாக வேண்டும். விசாரணையிலும், விசாரிப்பவனும், விசாரணையும் உள்ள மட்டும் த்வைதம் போனதாகச் சொல்ல முடியாது. தன் மூலத்தில்

ஒடுங்கிய அன்றே அத்வைதம் உண்மையாம். பக்தியிலும் அப்படியே. அதன் முதிர்ச்சியில் பகவானைத் தவிர வேறு ஒன்றும் இருக்க முடியாது. பகவானும் தன்னிடம் தன்னால் நினைக்கப்படுபவரே ஆதலின் தனக்கு அயலாக அவர் இல்லை. பகவானிடம் ஒருவர் பக்தி மற்றொருவர், பக்தி கொள்வதற்குரிய நான் யார் என்றே தெரியவில்லை என்கிறான். அவனுக்கு ஏற்றது விசாரணையே.

ஆயினும் பார்க்குங்கால், பக்திக்கும் விசாரணைக்கும் பேதம் ஒன்றுமில்லை.

பகவானின் பிரமாணத்தை ஆழ்ந்து நோக்க வேண்டும்.

ஸரணாகதியையும், விசாரத்தையும் இருவேறு மார்க்கங்களாக நினைப்பது முற்றிலும் தவறானது. ஸரணாகதிக்கு மாற்றாக விசாரணையையோ, விசாரணைக்கு மாற்றாக ஸரணாகதியையோ கருதுவது பொருந்தாது.

பிறகு ஏன் சரணாகதி, விசாரம் என்ற பதப்ரயோகங்கள் (வார்த்தைப் பயன்பாடுகள்) வந்தது என்றால், சாதகர்களின் மனதிற்குகந்த இருவேறு வார்த்தை கொண்ட (Synonymous) ஒரு பொருள்தான் அது. இதை சாஸ்திரத்தில் முக்ய ஸாமானாதி கரண்யம் என்று கூறப்படுகிறது. பாண்டிச்சேரிக்குப் போகிறேன் என்றாலும், புதுச்சேரிக்குப் போகிறேன் என்றாலும், இரண்டும் ஒரு இடத்தை நோக்கியே என்பது போல ஸரணாகதியையும் (பக்தி), விசாரத்தையும் (ஞானம்) பிரிக்க முடியாது.

பரப்பிரம்மத்தைப் பற்றிய அல்லது ஆத்மாவாகிய நம்மைக் குறித்த சாமான்யக்ஞானம் (மேலோட்டமான அறிவு) நமக்கு இருக்கிறது. ஆனால் விசேஷ ஞானம் (முழுமையான அறிவு) நமக்கு இல்லை. நான் இருக்கிறேன் என்கிற முழு அறிவு நம்மிடம் இல்லை. ஆகவேதான் உபதேசமும் இரண்டு விதங்களாக வடிவம்

பெற வேண்டியுள்ளது. சிறிய நானும், பெரிய நானும் கலந்த கலவையாக ஜீவன் விளங்குகிறான். சிறிய நான் தலையெடுக்கும்பொழுது பக்தி ப்ரயோகமும், பெரிய நானை பிரகாசப்படுத்தும் முயற்சியில் விசாரப் பிரயோகமும் செய்யப்படுகிறது.

பொற்கொல்லன் நகைகள் செய்வதுபோல விஷயம் நுணுக்கமானது. செம்பையும், தங்கத்தையும் கலந்து ஆபரணம் செய்வதுபோல சிறிய நானையும், பெரிய நானையும் கவனத்துடன் கையாண்டு ஸ்வரூபத்தை வார்த்து எடுக்க வேண்டியுள்ளது.

ரமண சந்நிதியில் நிகழ்ந்த குரு சிஷ்ய சம்வாதத்தைப் பார்ப்போம்.

கேள்வி: எனது இயல்பு ஆனந்தம் என்று எனக்கு விளங்கவில்லை. என்ன செய்வதென்று தெரியவில்லை. குருவிடம் ஸரணடையலாமா?

பகவான்: எனது இயல்பு ஆனந்தம். ஆனால் அது விளங்கவில்லை என்று சொல்கிறீர்கள். ஆகவே எது அந்த ஆனந்தத்தைத் தடை செய்தது என்று பார்க்க வேண்டும். உடல் நான் என்ற தவறான புத்தியே ஆனந்த விளக்கத்தை மறைக்கிறது. பிறகு அதை நீக்க நீங்கள்தான் முயற்சி செய்ய வேண்டும். வைத்தியர் கூறும் சிகிச்சை முறையைக் கைப்பற்றினால் நோய் நீங்கும்.

கேள்வி: வைத்திய முறையைக் கடைப்பிடிக்க முடியவில்லையென்றால் நோயாளி வைத்தியரிடம் தன்னை நிபந்தனையின்றி ஒப்படைக்கலாம் அல்லவா?

பகவான்: அப்படியெனில் வைத்தியர் எல்லா வற்றையும் கவனித்துக் கொள்வார். மீண்டும் சர்ச்சை எதற்கு? சும்மா இருக்க வேண்டியதுதானே!

கேள்வி: கடவுளின் இருப்பை எனக்கு உணர்த்த வேண்டும்.

பகவான்: தனது உண்மையை உணர்வதே கடவுளின் இருப்பை உணர்வதாம்.

சற்று உற்று நோக்கினால் குரு ரமணரின் உபதேசத்தில் அன்பும், பாதுகாப்பும், அக்கறையும் ஒன்று கலந்து இருப்பதை நம்மால் காண முடியும். எப்படியாவது ஒரு கவளம் சோற்றையாவது தன் குழந்தையின் வயிற்றுக்குள் தள்ளத் துடிக்கும் ஒரு தாயின் பரிதவிப்பு புரியும்!

“அம்மா! உன்னைவிட எனக்குப் பள்ளிக்கூடம் பெரிதாகத் தெரியவில்லை. எனக்கு நீ தான் வேண்டும். உன் அன்புதான் வேண்டும். நான் கட்டாயம் பள்ளிக்குப் போக வேண்டுமா?” என்று ஒரு சிறுவன் தன் தாயிடம் கேட்கிறான். குழந்தையிடம் தாய் கேட்கிறாள், “உன் அன்புக்குரிய தாயை நீ எதிர்காலத்தில் பாதுகாப்பாய் அல்லவா?”

சிறுவன்: நிச்சயமாக! இதில் என்ன சந்தேகம்?

தாய்: அப்படியென்றால் உன்னை நன்கு உறுதி செய்ய வேண்டும். அறிவு பெற வேண்டும். அப்பொழுதுதான் நீ வலிமை பெற்று உன்னையும், உன் அன்புக்குரிய அம்மாவையும் பாதுகாக்க முடியும் அல்லவா?

சிறுவன்: ஆம்.

தாய்: அப்படியென்றால் என்ன செய்ய வேண்டும்?

சிறுவன்: பள்ளிக்குச் செல்ல வேண்டும்.

மேற்கண்ட தாய் சேய் உரையாடலில் தாயானவள் நேரிடையாகப் பள்ளிக்குப் போ என்று தன் குழந்தையிடம் சொல்லவில்லை. தன் குழந்தைக்குப் பள்ளிக்குப் போக வேண்டிய அவசியத்தை உணர வைத்தாள்.

ஜீவப்ரயத்தனத்திற்கு வேறாக ஸரணாகதியை பகவான் கருதவில்லை. மாறாக ஸரணாகதி ரூபத்தில் ஜீவப்ரயத்தனத்தையே பகவான் வலியுறுத்துகிறார்.

ஜீவ இயல்பு தடித்து எழும்பொழுது ஈச்வர ஸரணாகதியையும், நான் ஸரணாகதி செய்து விட்டேன். இனி ஒன்றும் செய்ய மாட்டேன் என்று தமோகுணம் மேலிடும்பொழுது விசாரத்தையும் தேனையும், மருந்தையும் கலந்து தருவதுபோல் தருகிறார்.

கயிற்றின்மேல் நடக்கும் யுக்தி இது. கயிற்றின்மேல் நடப்பவனின் கையில் ஒரு கம்பு இருக்கும். கம்பின்வேலை கயிற்றின்மேல் நடப்பவனின் கவனத்தை அதன்மீது மட்டும் வைத்திருக்க உதவுகிறது. கம்பிற்கு அதற்குமேல் தாத்பர்யம் இல்லை.

"ஈச்வர அர்ப்பணம் செய்தல் என்பது கவனம் முழுவதையும் திரட்டி தன்மீது அர்ப்பணம் செய்வதே. ஆத்ம விசாரணையை விட்டால் அக்கணமே உலக விசாரம் (உலக கவலை) நம்மைப் பிடித்துக் கொள்ளும்" என்று பகவான் கூறுவார்.

பகவான் ரமணர் பல நேரங்களில் அடியார்களிடம் அபேக்ஷமாய் (பாராமுகமாய்) இருக்கிறார், அன்பர்களின் ஐயங்களை அலட்சியப்படுத்துகிறார் என்கிற ஒரு கருத்து மனதில் எழத் தோன்றும்.

நிச்சயமாக அப்படியில்லை. பகவானின் அலட்சியப் படுத்தலில்கூட அர்த்தம் இருந்தாக வேண்டும். இதை பக்குவிகள் நன்கு உணர்வார்கள்.

பரம ப்ரேமாஸ்பதமான (அனைவராலும் விரும்பத் தக்க) பிரம்ம ஸ்வரூபத்தை அறிய யாருக்குத்தான் விருப்பம் இருக்காது? ஆனால் அதை ஆத்மாவாக (தானாக) அறிய வேண்டியுள்ளது. நல்ல கனமான விருந்தை ஏற்பது பெரிதல்ல. ஏற்றதைச் செரித்து ஜீரணம் செய்தாக வேண்டும். குரு ரமணரின் க்ருபை இங்குதான் ஒரு கமா (,) வைப் போட்டுவிடுகிறது. சற்றுப்பொறு, பக்குவப்பட்டதும் விருந்தளிக்கப்படும் என்ற விதத்தில் மகரிஷியின் அணுகுமுறை அமைந்துள்ளது.

சாஸ்திரத்தில் ம்ரமரக்ரீட நியாயம் (குளவி புகு கொள்கை) பேசப்படுகிறது. ஞானத்திற்குரிய அதிகாரம் (தகுதி) கவனிக்கப்பட வேண்டிய விஷயம் ஆகிறது.

குளவி ஒன்று, புழுவைத் தன் கொடுக்கால் கொட்டுமாம். வலியினால் அதிகம் துடிக்கும் புழுவையும், அறவே துடிக்காத புழுவையும் தவிர்த்து விட்டு அளவாய்த் துடிக்கும் புழுவைத் தன் இனத்திற்குரிய பிஜமாய்த் தேர்ந்தெடுத்து தன்மயமாக்குமாம்.

தன்னைத் தேடி வந்த சாதகர்களின் உண்மையான விருப்பம் எதுவோ அதை குரு ரமண ஸந்நிதி நிறைவேற்றி வைக்கும். குருவிற்கு எந்த பாரபட்சமும் இல்லை.

**விஷய சுத்த சைதன்யம் ஜீவப்ரும்மைக்ய லக்ஷணம்**
**யத்ரைவ த்ருசியதே ஸர்வ வேதாந்தானாம் ஸமண்வயஹ**

ஜீவ பிரம்ம ஐக்யம் என்கிற ஒரு விஷயத்தில்தான் உபநிஷத்துகள் ஒத்துப் போகின்றன. மற்ற ஜகத், ஜீவ விஷயங்களில் பலவிதமான கருத்துகள் காணப் படுகின்றன. ஆகவே ஐக்யக்ஞானம் தான் தாத்பர்யம். ஆனால் சாதகர்கள் பெரும்பாலும் பன்முகத் தேடல்கள் உடையவர்களாக இருக்கிறார்கள்.

ஒருமுறை பகவானிடம் ஒரு அன்பர் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். அதன்மூலம் தனது ஸமர்ப்பணத்தை ப்ரகடனம் செய்து விட்டதாகவும், மேற்கொண்டு ஆக வேண்டியதை ரமணர்தான் செய்ய வேண்டும் என்று பிரலாபித்தார்.

பகவான் கூறினார்:

புறத்தில் செய்யப்படும் இதுபோன்ற நமஸ்காரம் ஸரணாகதத்தின் ஒரு அங்கம்தான். முழுஸரணாகதி என்று இதைச் சொல்ல முடியாது. ஸரணாகதி என்பது உன் அகத்தோடு சம்பந்தபட்ட விஷயம். ஸரணாகதி என்பது என்ன? தனக்கு மூலகாரணமாம் சொரூபத்தினிடத்தில் தன்னை ஒப்படைத்தலே

ஸரணாகதியாம். ஆனால் மூலஸ்வரூபம் என்பது புறத்தே இருக்கிறது என்று மதிமயங்கக் கூடாது. உன்னுள்ளே நாடி உணர்ந்து அம்மயமாய் அமர வேண்டும். இறைவனே அனைத்துமாய் இலங்கிக் கொண்டிருக்கும் பொழுது நானாகவும், நீயாகவும் அவர்தான் தோன்றிக் கொண்டிருக்கிறார் அல்லவா? பிறகு எதை யாருக்கு யார் ஸமர்ப்பணம் செய்வது? தன்னைவிடாது இருத்தலே உத்தம ஸமர்ப்பணம்."

ஆசினோதிஹி சாஸ்த்ரார்த்தம் ஆசாரே ஸ்தாபயத்யரி
ஸ்வயம் ஆசரதேயச்ச தம் ஆச்சார்யம் ப்ரசக்ஷதே

சாஸ்த்ர அர்த்தத்தை தெளிவாக மற்றவர்களுக்கு எடுத்துக்கூறியும், அதன்படி சிறப்பாக வாழ்ந்து காட்டுபவர்தான் குரு. இந்த லக்ஷணத்தை பகவான் ரமணரின் ஜீவிதத்தில் காண முடிகிறது.

துவாரகாபுரி தலைமைப் பூஜாரியின் விண்ணப்பம் ஒருமுறை பகவான் முன் வைக்கப்பட்டது. "ஸ்ரீகிருஷ்ண சாக்ஷாத்காரம் (தரிசனம்) செய்ய விரும்புகிறேன். பகவான் அனுக்கிரஹம் செய்ய வேண்டும்" என்பது வேண்டுகோள்.

பகவான்: ஸ்ரீகிருஷ்ணனைக் குறித்து உங்கள் அபிப்ராயம் என்னவென்று முதலில் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் அவரை மனிதர் என்றும், மனித உரு உடையவர் என்றும் நினைக்கிறீர்கள். அவரோ எல்லா ஜீவராசிகளுடைய இதயங்களிலும் நான் இருக்கிறேன் என்று கூறியிருக்கிறார். அப்படியெனில் அவர் உங்களுக்குள் இருக்கிறார் அல்லவா? ஆகவே ஆத்மதர்சனம் செய்வதும் கிருஷ்ணதர்சனம் செய்வதும் ஒன்றுதானே! ஆத்ம சாக்ஷாத்காரமும் ஸ்ரீகிருஷ்ண சாக்ஷாத்காரமும் ஒன்றே!

ஐயங்கள், அதற்கு வழங்கப்படும் பதில்கள் அனைத்தும் அஹங்காரத்தின் ஏற்பாடுகள் என்பதை

பகவான் ரமணர் கூறாமல் கூறுகிறார். "காட்டாமல் காட்டும் வேதம்" என்று கைவல்ய நவநீதம் கூறுவதுபோல பகவான் ரமணரின் பதிலளிப்புகள் நமது கேள்விகளை சாந்தப்படுத்தி நீக்கி விடுகின்றன. ஸ்வரூபம் தானாக விளங்குகிறது!



மௌனம், சொற்கள், நீண்ட உபதேசம், அலட்சியப் படுத்துதல் அனைத்துமே பகவான் ரமணரின் ஆயுதங்களாக இருக்கின்றன. எது எப்படியோ அவரவர்க்கு ஏற்ற முறையில் அறுவை சிகிச்சை நடந்தேறிவிடும். ஸ்வரூபத்திலிருந்து மாயையானது வெட்டி நீக்கப்பட்டு விடும். ரமண பக்தர்களின் அனுபவமே இதற்குப் ப்ரமாணம்.

# நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை

**Dr. ஏ.வி. ராஜகோபாலன்**

இந்திய வேதாந்தம், மனக் கட்டுப்பாட்டையே பிரம்மத்தை அடையும் வழியாகக் காட்டுகிறது. இந்திரியங்கள் யாவற்றிலும் பலம் படைத்தது மனமேயாகும். மனமெனும் தோணி பற்றி இந்த சம்சாரக் கடலைக் கடப்பதே ஆன்மீக சாதனையாகும். இதைக் கட்டுப்படுத்துவது என்பது மிகக் கடினம் என்பதை உணர்ந்த முன்னோர்கள் இதற்கு "மனக்குரங்கு" என்று பெயரிட்டனர். ஆதிசங்கர பகவத்பாதரும் இதை "மம ஹ்ருதய கபிம் அத்யந்த சபலம்" என்று குறிப்பிடுகிறார். என் மனக்கரங்கு மிகுந்த சபல புத்தியை உடையது. அதைப் பரம்பொருளே உன் வசப்படுத்து என்று வேண்டுகிறார்.

ரமணர், சம்சாரிகளின் இந்நிலையை நன்கு உணர்ந்தவர். நம் பொருட்டு அவர் அருணாசலப் பெருமானிடம் வேண்டுகிறார்.

உனையே மாற்றி ஓடாதுஉளத்தின்மேல்
உறுதியாய் இருப்பாய் அருணாசலா

(அக்ஷரமணமாலை 7)

என்னை உடையவன் நீ. நான் முழுவதும் உன் உடமை. நீ பல உன்னத தத்வார்த்தங்களை எனக்கு அளித்து இருக்கிறாய். இந்தப் பேரின்பத்தை விட்டுவிட்டு, பயனற்ற விஷய சுகங்களையே என் மனம் நாடுகிறதே! இவ்வாறு அலையா வண்ணம் உன்மேல் பற்று வைத்து மற்ற பற்றுக்களை அறுக்க எனக்குத் துணை நிற்பாயாக என இறைஞ்சுகிறார்.

“உன்னை ஏமாற்றி” என்பது நோக்கத்தக்க அரியதோர் தத்துவம். இறைவன் நமக்காக பல திருவிளையாடல்களை நடத்துகிறான். ஞானிகள் பலர் மூலம் அவன் தத்துவத்தை நடாத்திக் காட்டுகின்றான். “நான் இருக்க பயமேன்” என்று நமக்கு உறுதியளிக்கிறான். இத்தனை எளியவனாகிய அவனைத் துறந்துவிட்டு, தாற்காலிக இந்திரிய சுகங்களை அளிக்கும் இச்சைகளையே மனம் நாடுகிறது. இவ்வாறு நமக்கு எல்லாவித வசதிகளை செய்து தரும் பெருமானை நாம் துறந்து வருவதற்குக் காரணம் என்ன? இது கீழ்நோக்கிப் பாயும் மனதின் பலவீனமாகும். இதனால் நம்மைப் படைத்த பரம்பொருள் ஏமாற்றப்படுகிறான். இதுவே “உன்னை ஏமாற்றி” நடக்கும் மனத்தின் விளைவு.

இதை ‘உன்னையே மாற்றி’ என்றும் பொருள் கொள்ளலாம். இறைவன் பேரின்ப வடிவானவன். அவன் முன் நின்றுகொண்டே நாவால் அவன் புகழ்பாடி காதால் அவன் புகழ் கேட்டு கண்களால் அவன் அழகினையெல்லாம் பார்க்கும் அதே சமயத்தில் மனதால் வேறு பல சிந்தனைகளை நினைக்கும் ஆற்றல் படைத்தவன் ஜீவாத்மா. இதையே ‘உன்னையே மாற்றி’ என்று பகவான் விளக்குவதாகக் கொள்ளலாம். இது இந்திய வேதாந்தத்திற்கு ஒரு புதிய கோணம்.

பரம்பொருள், பற்றுகளை ஒழித்து, அவனையே பற்றிய சாதகனுக்கு ஒளிமயமான ஒரு உலகத்தைக் காட்டுகிறது. அங்கு சூரியன் இல்லை. சந்திர நட்சத்திரங்கள் இல்லை. அந்தப் பரம்பொருளின் ஒளியே எங்கும் அரும்பெரும் சோதியாய் விளங்குகிறது. அங்கு காரண-காரிய நியதிகள் எடுபடுவதில்லை. எல்லையற்ற ஆனந்தம் காணக் கிடைக்கிறது. மனதை வசப்படுத்திய ஆன்மா இந்த ‘பூமா’ என்ற நிறையையே எய்த விரும்புகிறது. சாதாரணன் இறைவன் சந்நிதானத்தில் அவன் முன் நின்று பொருளையும் புகழையும் மற்றும்

அழியக்கூடிய வஸ்துக்களையே இறைஞ்சி வேண்டுகிறான். பேரின்பத்தைத் தரக்கூடிய இறைப் பொருளிடம் சிற்றின்பத்தை நாடும் நரன், அவனையே, அவன் அருளையே மாற்றி விடுகிறான். ‘உன்னையே மாற்றி’ என்பதற்கு இவ்வண்ணமும் பொருள் கொள்ளலாம்.

ஆனால் மனத்தை வசப்படுத்தியோர் எதையும் அடைகிறார்கள். பரம்பொருளின் வாசலை அடைய சில படிக்கட்டுகள் கூறப்படுகின்றன. முதல்படி அவனைப் பற்றிய ஒரு சிறிய உத்வேகம். இதை அபிலாஷா என்று சொல்லலாம். இது ஒரு ஆலயத்திலோ, உபன்யாசத்திலோ கிடைக்கும் தற்காலிக ஆசை. யாருக்கு இந்த பக்தி உணர்வு தோன்றி சில மணித்துளிகளில் மறைந்து விடுகிறது. வெகுசிலரே இறைஉணர்வில் தொடர்ந்து ஈடுபடுவர். இந்த சிந்தனை இரண்டாம்படி. இதைத் தொடர்ந்து இறைநிலையில் மனதைத் தொடர்ந்து ஈடுபடுத்துவது மூன்றாம் நிலை. இதுவரை பக்தன் அனுஷ்டானம், வைராக்கியம் போன்ற செயல்பாடுகளால் மனதைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருகிறான். ஒரு நிலையில், இந்த வரைமுறைகள் தேவையற்றுப் போய்விடுகின்றன. இறை உணர்வே இன்பமளிக்கத் துவங்குகிறது. அந்த நினைவே இன்பம், மற்றவை தேவையற்றவை என்ற உயரிய எண்ணம் சாதகனின் உள்ளத்தில் நிலை பெற்றுவிடுகிறது. இந்நிலையில் அவன் தன்னை மறந்து அந்த பரஞ்ஜோதியில் லயிக்கிறான். பாரத தேசத்தில் பல்வேறு காலகட்டங்களில் மகான்கள் பலர் தோன்றி, பரதத்துவத்திற்கான மார்க்கத்தை விளக்கியுள்ளனர். 5000 ஆண்டுகளுக்கு முன்பு வேத இலக்கியங்கள், இப்பரஞ்ஜோதியை “எந்தப் பேரிட்டு எந்த வடிவில் போற்ற இயலும்” என்ற வியப்பு மேலிட்டுப் பரவசமாகின்றனர்.

“கஸ்மை தேவாய ஹவிஷா விதேமா” (ரிக். 10-121.1)

திராவிட மொழியாம் தமிழில் ஆழ்வார்கள் இதையே கூறுவர். அவனை எப்பேரிட்டு, எந்த வடிவில் விழைகிறாயோ, அவன் அந்த வடிவில் தோன்றுகிறான். இது மதம், காலம், சித்தாந்தம் போன்ற எல்லைகளிலிருந்து பரம்பொருளை விடுத்து, உலகெங்கும் அறியக்கூடிய ஒரு சமரசப் பொருளாக விளக்குகிறது

*தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே*
*தமர் உகந்தது எப்பேர் மற்ற அப்பேர்*

*(முதல் திருவந்தாதி)*

இந்த உன்னத நிலையை எப்படி அடைவது என்பதே நம்முள் எழும் வினா. வேதாந்தத்தை உணர விரும்புகிறவன் ஒரு நிலையிலும் நிற்காது அலைபாயும் உள்ளத்தை, அதை இழுக்கும் காரணங்களிலிருந்து மீட்டு, ஆத்மாவின் வசத்தில் கொண்டு வரவேண்டும். இதைக் கீதை தெளிவுபடுத்தும்.

*யதோ யதோ நிச்சரதி*
*மனச்சஞ்சல மஸ்திரம்*
*ததஸ் ததோ நியம்யைதத்*
*ஆத்மன்யே வ வசம் நயேத் (6.26)*

இது ஆத்யாத்ம விஷயத்தை நாடும் சாதகனுக்கு மட்டும் அல்ல; நாட்டையாளும் அரசனுக்கும் பெருமளவு பொருந்தும் என்பது கௌடில்யரின் கருத்து. “ஷட்ரிபு:” என்ற விளக்கத்தால் அர்த்தசாஸ்திரம் இதை உறுதிப்படுத்தும். பிளேட்டோ என்ற கிரேக்க சிந்தனையாளர் இது குறித்துக் குறிப்பிடுகையில் தத்துவஞான-மன்னர் (philosopher-king) என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளார். இது இந்திய வேதாந்த உலகிற்குப் புதியதல்ல. ஞானி என்ற முத்திரை குத்தப்பெறாத சாமானியர்களுக்கும் புலனடக்கம் இந்திரிய நிக்ரஹம் போன்றவை விதிக்கப்பட்டுள்ளன.

இந்த மனம் நம்மை உயர்வான நிலைக்கு அழைத்துச் செல்லவும் அதலபாதாளத்தில் தள்ளிவிடவும் என்ற இரண்டு திறனும் படைத்தது. இதை கீதை தெளிவுபடச் சொல்கிறது. "உன்னை நீயே உயர்த்திக் கொள்ள வேண்டும். நீயே உன்னைத் தாழ்த்திக் கொள்ளாதே. உனக்குத் தோழன் நீயே; உனக்குப் பகைவனும் நீயே" (6.5). எனக்குள் இருக்கும் இந்த ஆத்மா உன்னதமானது. இது சத்தியம். இதை நான் ஆராதிக்கிறேன். என் செயல்களால் என்னை மேம்படுத்திக் கொள்ளுகிறேன். நல்ல எண்ணங்கள், நல்ல செயல்பாடுகள் ஆகியவற்றால் என்னை சத்துவ நிலைக்கு ஏற்றிச் செல்கிறேன். என் பாதை ஒளிமயமானது. இந்தப் பயணத்தில் என்னை நானே வெல்கிறேன். எனக்குத் தோல்வியோ துக்கமோ ஏமாற்றமோ கிடையாது. அம்ருத நிலையை நான் இவ்வுலகிலேயே அடைவேன் (அம்ருத இஹ பவதி - வேத வாக்கியம்). எனக்கு வெற்றி-தோல்வி, இன்பம்-துன்பம் போன்ற இருமைகளின் தாக்கம் இல்லை. இதுவே வேதாந்த சாரம்.

"தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்ற சங்கப் புலவரின் வாக்கு இங்கு நோக்கத்தக்கது. வெளிநடப்புகளினின்று நன்மையும் தீமையும் பெறப்படுவதில்லை. இருமை களின் தாக்கம் "துவந்த்வ மோகம்" என விவரிக்கப் படுகிறது. மனம் என்ற வடிகட்டியை சரிவரப் பயன்படுத்தினால் இன்ப-துன்ப உணர்வுகளை வெல்ல இயலும். அனுபவம் முதிர முதிர, நாம் இதை உணரத் தொடங்குகின்றோம். தினசரி வாழ்வின் நியதிகள் நம்மைக் கட்டுப்படுத்த முயல்கின்றன. இதை உணர்பவன் தன் மனத்தை விவேகம் என்ற சக்தியால் கட்டுப்படுத்துகிறான். வாழ்க்கையையே அவன் ஒரு கரும யோகியாக வாழ முயல்வான். சிறுமுயற்சிகூட, இந்த வேள்வியில் பெரும் பயனைத் தரும். வாழ்க்கைத் தேரில் புத்தியே சாரதி. மனமே கடிவாளம் (கடோபநிஷத்). இந்த புத்தி-மனம் என்ற சக்திகளைத்

திறம்படக் கையாண்டால் வாழ்க்கைப் பாதையில் சாதகனின் தேர் எந்த இடையூறும் இன்றி செவ்வனே பயணிக்கும். இதுவே வேதாந்தம் காட்டும் வழி.

பாரத தேசத்தின் தத்துவ சாஸ்திரம் மனதின் கேண்மையைப் பற்றியே விவரித்துக் கூறும். நம்முடைய வாழ்வில் உயர்வையும் தாழ்வையும் மாறிமாறிப் பார்க்கிறோம். 'பாசன்' என்ற சம்ஸ்கிருத நாடக ஆசிரியர் சக்கிரத்தின் போக்கைப் போலவே, நம்முடைய பாக்கியத்தின் போக்கும் மேலும் கீழும் உயர்ந்தும் தாழ்ந்தும் போகின்றது என்கிறான் (சக்ரார பங்க்திரிவ கச்சதி பாக்ய பங்க்தி). யதார்த்த உலகின் இன்றியமையா அம்சங்கள் வெற்றியும்-தோல்வியும் ஆகும். இவற்றின் விளைவே சுகம்-துக்கம் என்னும் இருமைகள். இவை வெளிக்காரணங்களால் தோன்றுபவை. நீடித்த இன்பத்தையோ துன்பத்தையோ படைத்தவை. ஞானம் என்னும் படகினால் பாவியாகிய இந்தச் சம்சாரி இவற்றைக் கடக்கிறான். இந்த வெளிக் காரணங்களின் சக்தியை உணர்ந்தவன் வினைப்பயன்களை சாம்பலாக்குகிறான். இந்த ஞானத்திற்கு ஈடுஇணை இல்லை. (கீதை நான்காம் அத்தியாயம் 36-38). பந்தங்களின் பிடியிலிருந்து வெளிவருதலே பக்தி மார்க்கத்திலும் விவரித்துக் கூறப்படுகிறது. நம்முடைய செயல்கள் அனைத்தையும் இறைவன்பால் சமர்ப்பித்தலே பேரின்பத்திற்கு மார்க்கமாக பக்தி இலக்கியங்கள் கூறுகின்றன. "கோமார்க்கே நாம் என்றும் மீளா அடிமை, கொய்ம்மலர் சேவடியினையே குறுகினோமே" என்று நாவுக்கரசர் பரம்பொருளைப் பற்றும் முறைபற்றி விளக்குகிறார். 'நான்' என்னும் அகந்தை அழிந்த நிலையில் இறைவனிடம் குறுகி, அவள் மீளா அடிமை ஆகும் திறன், அடியார்களின் பெரும்பேறு. குலசேகரப் பெருமான், திருமலையில் ஒரு பக்தனாக இருக்கும் பேற்றைக்கூட விரும்பவில்லை. அங்கு ஒரு மீனாக, மரமாக, மலைமுகட்டாக, சாலையாக, படியாக-இப்படி

எந்த விதமான சேதன-அசேதனப் பொருளாகவும் பிறக்கவே விரும்புகிறார். இறுதியில் அந்த முடிவையும் இறைவனுக்கே அளித்து "எம்பெருமான் பொன் மலையில் ஏதேனும் ஆவேனே" என்று விண்ணப்பம் செய்கிறார்.

இதுவே முதிர்ச்சியின் அறிகுறி. மனம் என்பது பலம் மிகுந்த ஒரு இந்திரியம். அது வாழ்வின் எல்லா அம்சங்களையும் பாதிக்கக்கூடியது. நல்ல மனம் என்பது ஒரு பலவீனமான நிலைபாடு அன்று. "நேயமாத்மா பலஹீனேன லப்த:" என்பது உபநிடதக் கோட்பாடு. ஆத்மா ஒருபொழுதும் பல மற்றவர்களால், அடையப்படத் தக்கதல்ல. இதையே தத்துவ நூல்கள் செவ்வனே விளக்குகின்றன. ஒரு சிறந்த மனிதன் வாழ்வில் எவ்வாறு செயல்படுவான் என்பதை உணர்த்துவதே வேதாந்தத்தின் நோக்கமாகும்.

## பகவான் ஸ்ரீ ரமணரின் 64ஆவது ஆராதனை விழா சிறப்பு வெளியீடுகள்

*1995 ஆம் வருடம் கொண்டாடப்பெற்ற ஸ்ரீ ரமணாச்ரம கும்பாபிஷேகம், 80 நிமிட வீடியோ, 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற அருணை விஜய விழா, 69 நிமிட வீடியோ, மற்றும் வெங்குட்டு - 100 - முன்னாள் ஆச்ரம தலைவர் டி.என். வேங்கடராமன் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி (1914-2014) அவர் பற்றிய வீடியோ படம். இம்மூன்று DVD-க்களும் பகவான் ஆராதனை தினத்தன்று ஸ்ரீ ரமணாச்ரமத்தால் வெளியிடப்பட உள்ளன.*

# ரிபுகீதை

## தியாகராஜன்

அத்வைத சொரூபத்தின் அபேத நிஷ்டை உரைக்கும் ரிபு கீதையில் 26வது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால், அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று ஸ்ரீபகவான் அருளியுள்ளார்கள். அந்த அத்தியாயத்தின் பாடல்களை, அவை தொடர்பாய் ஸ்ரீபகவான் அவ்வப்போது அருளியுள்ள விளக்கங்களோடு அடியவர்களுக்கு அர்ப்பணிக்கிறோம்.

*எதனிடையி னரகபய மணுவு மில்லை*
*யெதனிடையிற் சுவர்க்கசுகந் தானு மில்லை*
*யெதனிடையி லயன் முதலோ ருலக மில்லை*
*யெதனிடையி லங்குபெறும் பேறு மில்லை*
*யெதனிடையிற் பின்னுமுள வுலகு மில்லை*
*யெதனிடையிற் பிரமாண்ட மெவையு மில்லை*
*யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி*
*யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய். (26/19)*

*எதனிடையிற் பொருந்தியிடும் பூத மில்லை*
*யெதனிடையிற் பௌதிகமோ ரணுவு மில்லை*
*யெதனிடையின் மமதையிலை யகந்தை யில்லை*
*யெதனின் மனோ ராச்சியமோ ரணுவு மில்லை*
*யெதனிடையிற் சங்கமெனுந் தோட மில்லை*
*யெதனிடையிற் சற்றுமொரு விகற்ப மில்லை*
*யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி*
*யம்மயமா யநவரதஞ் சுகித்திருப்பாய். (26/20)*

*[வசனாம்ருதம் பாகம் 1 (2004) பக். 60-62]* கே: ஸ்வர்க்கம், நரகம் வாஸ்தவமா?

ப: ஸ்வர்க்கத்திற்கும் நரகத்திற்கும் போகிறவன் ஒருவனை வைத்துக்கொண்டுதானே, அவற்றைப் பற்றிப்

பேசுகிறோம். அவன் யார்? எல்லா உலகங்களும் கனவைப் போன்றவையே. நனவிற் போலக் கனவிலும் தேசகாலங்களைக் காண்கிறோம். எதை வாஸ்தவ மென்பது?

ஸ்வர்க்க நரகங்கள் என்பவை எவை?

ப: ஸ்வர்க்கம் நரகம் நமக்குள்ளேதான் இருக்கின்றன. காமக்ரோதாதிகளின் விரிவே நரகம். ஸ்வர்க்கம் நரகம் எல்லாம் சொப்பனம் போன்றவையே.

[வசனாம்ருதம் பாகம் 1 (2004) பக். 47] சிவன், விஷ்ணு முதலாம் மூர்த்திகளும், கைலாசம் வைகுண்டம் முதலாம் உலகங்களும் வாஸ்தவமா?

ப: நாம், இந்த உலகம் எவ்வளவு வாஸ்தவமோ, அவ்வளவு வாஸ்தவமாக அவர்களும் இருக்கிறார்கள்; அவ்வுலகங்களும் இருக்கின்றன.

கே: வியாவஹமாக ஸத்யத்தில் நாமிருப்பதுபோலவே அவர்களும் இருக்கிறார்களா?

ப: நாமெல்லோரும் இருக்கும்போது அவர்கள் மாத்திரம் இல்லையென்று எப்படிச் சொல்வது?

கே : அவர்கள் இருக்கிறார்களெனில், எங்கே எப்படி இருக்கிறார்கள்?

ப: அவர்களைப் பார்த்தவர்கள் எங்கோ எப்படியோ அவர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதுவே நமக்குப் பிரமாணம்.

கே: அவர்கள் எங்கேயிருக்கிறார்கள்?

ப: நம்முள்ளேதான்.

கே: அப்படியெனில் எல்லாம் நமது பாவனையே யென்றும் பகவான் சொல்கிறார் போலிருக்கிறது.

ப: அப்படியேதான் எல்லாம்.

*[வசனாம்ருதம் பாகம் 2 (2000) பக். 189] ப: இந்த 'நான்' யார்? அது உடலுமன்று, மனமன்றென முன்னரே கண்டோம். விழிப்பு கனவு துயிலென்னும் மூன்று அவஸ்தைகளையும் உணர்வது இந்த நானே. அவஸ்தாத்ரய ஸாக்ஷியாம் நான் அவஸ்தைகளால் பாதிக்கப்படுவதில்லை. சினிமாவில் திரைமீது தோன்றி மறைபவை திரையை எவ்விதமும் பாதிப்பதில்லை. அவ்வாறேதான் ஜாக்ரத்–ஸ்வப்னத் தோற்றங்களும், அவையற்ற சுழுத்தியும் ஆத்மாவை எவ்விதம் பாதிப்பதில்லை. இவ்வுண்மையை நாம் அனுபவித்துணர்ந்தால் தோன்றி மறையும் வாழ்க்கை–நிகழ்ச்சிகளால் சற்றும் பாதிக்கப்படாது, சாந்திமயமாய், ஆனந்தமயமாயிருக்கலாம்.*

*[அனுதினமும் ஸ்ரீபகவானுடன் (2003) பக். 343] அடியார்: அரவிந்தர் உலகம் உண்மை என்று சொல்கிறார். பகவானும் வேதாந்திகளும் அது உண்மையில்லை என்கிறீர்கள். உலகம் எப்படி பொய்த் தோற்றமாகும்?*

*பகவான்: வேதாந்தத்தில் உலகம் உண்மையல்ல என்று சொல்லவில்லை. அது ஒரு தவறான கருத்து. அவர்கள் அப்படிச் சொன்னால், 'சர்வம் பிரம்மமயம்' என்னும் வேதாந்த வாக்கியத்தின் பொருள் என்னவாகும்? அவர்கள் சொல்வதெல்லாம், உலகம் உலகமாக இருக்கிறது என்பது உண்மையல்ல. ஆனால் அது ஆன்மாவாக இருப்பதே உண்மை. உலகத்தை ஆன்மாவல்ல என்று நினைத்துக்கொண்டாயானால் அது உண்மையல்ல; அனைத்துமே – அதை உலகம் என்றாலும் சரி, மாயை, லீலை அல்லது சக்தி என்றாலும் சரி; அனைத்தும் ஆன்மாவினுள் அடக்கமேயன்றி, அதை விட்டு தனித்து அல்ல. சக்தனிலிருந்து சக்தி என்ற ஒன்று தனியாக இருக்க முடியாது.*

*[வசனாம்ருதம் பாகம் 2 (2000) பக். 222] கே: அத்வைத சித்தாந்தத்தைப் பின்பற்றுவோரிடையிலேயே,*

*உலகம் ஸத்யமெனச் சிலரும், அஸத்யமெனச் சிலரும் கூறுகின்றனரே, இதன் முடிவென்ன?*

*ப: அடிப்படையாம் ஆத்மாவையுணராது வெறும் நாமரூபப் பிரபஞ்சத்தைக் காணுங்கால் அது அஸத்யம்; அதிஷ்டானத்தோடு உலகைக் காணின் உலகம் பிரஹ்மாகாரமேயாம். ஆரோபிதத்திற்கு அதிஷ்டானத் திற்கு அன்னியமாய் இருப்பேயில்லை.*

*[அநுவாத நூன்மாலை - ஆன்மபோதம் (1998) பக். 343-349, பாடல்கள் 12-16 பொழிப்புரை, டி.ஆர். கனகம்மாள்]*

*'பஞ்சீகரணம் செய்யப்பட்ட ஐந்து பெரும் பூதங்களின் கலப்பின் காரியமானதும், முற்பிறவியில் செய்யப்பட்ட இருவினைகளின் கலப்பினால் உண்டானதுமான ஸ்தூல சரீரம், நெஞ்சைக் கலங்கச் செய்யும் துன்பங்களையும், இன்பம் தரும் சுகபோகங்கள் முதலான எவையும் அனுபவிப்பதற்கு உகந்த இடமாக அமைந்தது இந்த உடலென்று சொல்லப்படுகிறது'.*

*'பஞ்சீகரணம் செய்யப்படாத நுண் பூதங்களிலிருந்து (பஞ்ச தன்மாத்திரைகளிலிருந்து) உண்டான, ஐந்து பிராண வாயுக்கள், மனம், புத்தி, ஞானேந்திரிய கர்மேந்திரியங்களாகிய பத்தும் பொருந்திய கருவிகள், இவை யாவும் அடங்கியது சூக்ஷ்ம சரீரம். வற்றாத சுக துக்கங்களை அனுபவிப்பதற்கு கருவியாய் உள்ளது. இந்த சூக்ஷ்ம சரீரம் என்று தெரிந்து கொள்.*

*'ஆரம்பமாகிய தொடக்கமில்லாததும், இன்ன விதமானதென்று சொல்ல முடியாத, அனிர்வசனீயமான அவித்தையை (மாயையை) காரண சரீரரென்று கூறப் படுகிறது. ஸ்தூல, சூட்சும காரணமென்று சொல்லப்பட்ட இந்த மூன்று சரீரங்களினின்றும் வேறாக உபாதியற்ற நிருபாதிகமான ஆன்மாவை அறிந்திடுவாய்'.*

*'நிர்மலமான ஸ்படிகமானது, தன்னெதிரே வைக்கப் படும் கருப்பு, நீலம் முதலான வஸ்திரங்களின்*

சம்பந்தத்தால் அந்தந்த நிறமுள்ளதாகத் தோன்றுவது போலவே, மாசு மருவற்ற பரிசுத்த ஆன்மாவும், அன்னமய பிராமயாதி ஐந்து கோசங்களின் கூட்டுறவால், அந்தந்தக் கோசத்தின் சொரூபமாகவே தோன்றுகிறது. எதிலும் ஒட்டாத தாக்கமற்ற பூரணமாகிய மெய்ப் பொருள்'.

'உடல் முதலான ஐந்து கோசங்களுடன் கூடி, அதன் உள்ளே பிரகாசிக்கும் பரிசுத்த ஆத்மாவை, திடமான சுருதி, யுக்திகளினாலும், சாஸ்திர விசாரங்களினாலும் ஆத்மாவுடன் சேர்ந்திருக்கும் பஞ்ச கோசங்களை ஒழித்து, உமியுடன் கூடிய நெல்லை உலக்கையால் நன்றாகக் குத்தி அரிசியைப் பிரித்தெடுப்பதுபோல, ஆத்மாவைப் பிரித்தறிய வேண்டுமென்று உணர்வாய்'.

*[வசனாம்ருதம் பாகம் 2 (2000) பக். 222] ப:* காரணசரீரம் ஒழிந்தால் அத்துடன் ஜீவனது அனந்த ஜன்ம கர்மக்குவியலாம் ஸஞ்சிதம் ஒழிகிறது; அகந்தையற்றுப் போவதால் இனிமேல் பயன்களை வருவிக்கக்கூடிய ஆகாமியெனப்படும் கர்மம் அவனுக்கில்லை. ஏற்கெனவே, தற்சமயம் இருக்கும் உடலை யொட்டி நிகழ்ந்து வரும் பிராரப்தகர்மம் ஓய்ந்ததும் இவ்வுடலும் விழுந்துவிடும்.

*[வசனாம்ருதம் பாகம் 2 (2000) பக். 17] ப:* உபத்திரவம் அனைத்தும் தேகான்மபாவத்தாலேயே உண்டாகிறது. அதுவே அஞ்ஞானம். விசாரணையால் அது ஒழியும். தேகான்மபாவம் நீங்கினால் தானே தானாய் என்றுள்ள ஸஹஜான்மநிலை தெளிவாய் விளங்கும்.

*[வசனாம்ருதம் பாகம் 2 (2000) பக். 288] கே:* அதை (அகந்தையை) ஒழிப்பதெப்படி?

*ப:* மனத்திற்கும் புத்திக்கும் மூலமாம் அகந்தை எங்கிருந்தெழுகிறதென்று நாடினால் அகந்தை ஒழிந்து விடும். நான் அறிகிறேனென்பதும் அறிகிலேனென்பதும் துவிதமாம் காண்பான் காட்சி விவகாரம். ஆத்மா ஏகம்,

அங்கே அறிவறியாமைகள் இல்லை. தானேதானா யொளிர்வது ஆத்மா. எண்ணங்கள் யாவும் துவைதபாவத்திலேயே. எண்ணங்களின் வழியே செல்லாது, எண்ணுபவன் யாரென்னும் மூலநாட்டத்தால் அகந்தையை அறவேயொழிக்க வேண்டும்.

[வசனாம்ருதம் பாகம் 2 (2000) பக். 192] மனத்தை ஓடவிடாது நிறுத்து, மனமென்பது என்னவென்று பார் என்றெல்லாம் ஆரம்பச் சாதகர்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. மனமென்பது என்ன? ஆத்மாவி னின்று கிளம்பும் ஓர் போலியறிவு. அவ்வகந்தை எங்கிருந்து கிளம்புகிறதென்று அதன் மூலத்தை நாடி னால் அகந்தையொழிகிறது. அகந்தை யொழிந்த விடத்தே காண்பான், காட்சியென்னும் பாகுபாடற்ற அகண்ட, அஹம்போதமொன்று இடையறாது சுடர்கிறது. உபாதிகளால் வரையுறுங்கால் அது ஜீவவகந்தையாகிறது.

[வசனாம்ருதம் பாகம் 2 (2000) பக். 199-200] கே: மனைவி மக்களுக்கு நான் செய்யவேண்டிய கடமைக ளிருக்கின்றன. அவர்களிடம் பற்றுதலின்றிக் கடமைகளை எவ்வாறு செய்வது?

ப: உங்கள் காலேஜ் உத்யோகத்தை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

கே: அதனாற் கிடைக்கும் ஊதியங்கருதி உத்யோகத்தில் ஈடுபட்டிருக்கிறேன்.

ப: இருந்தாலும், முக்கியமாகக் கடமையுணர்ச்சி யாலேயே செய்கிறீர்கள்; பற்றுதலால் அல்ல.

கே: ஆனால் என் மாணவர்கள் அவர்களிடம் நான் பிரத்யேக அன்பு பூணவேண்டுமென்று எதிர் பார்க்கிறார்கள்.

ப: “வெளியே பற்றுதலுற்றாற் போலவும், உள்ளே எப்பற்றுதலும் அற்றவ னாகவும் உலகத்தே யுலவு” என்று வாஸிஷ்டம் உபதேசிக்கிறது.

*[வசனாம்ருதம் பாகம் 2 (2000) பக். 184]* கே: பற்றறல் என்பதென்ன?

ப: அகந்தைப் பற்றறலே பற்றனைத்தும் அறலாம்.

கே: பற்றறலென்பது எனதென்னும் அபிமானமறல் அல்லவா?

ப: நானென்னும் அபிமானம் அறவே ஒழியவேண்டும்.

கே: பிறர்நலனைக் கருதி தனது தனிச் சொத்தென்னும் அபிமானத்தை நாம் விட்டால், உலகமே மாறி விடுமல்லவா?

ப: 'நாம்' என்பதையே முதலில் விடவேண்டும்; அதன்பின் அதற்கயலாய் ஏதாவது மிகுந்திருந்தால் அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

*[உள்ளது நாற்பது - பாடல் 26]*

"அகந்தை உண்டாயின் அனைத்தும் உண்டாகும்; அகந்தை இன்றேல் இன்று அனைத்தும்; அகந்தையே யாவும் ஆம்; ஆதலால் 'யாது இது' என்று நாடலே ஓவுதல் யாவும் என ஓர்." - ஸ்ரீ பகவான்.

கே: சந்தேகங்கள் பல மேன்மேலும் எழுகின்றன. என்ன செய்வது?

*[வசனாம்ருதம் பாகம் 2 (2000) பக். 288]* ப: சந்தேகங்களுக்கு ஓர்முடிவேயில்லை. அவை மேன்மேலும் எழுந்துகொண்டு தானிருக்கும். ஆதலால், சந்தேகிப்பவன் யாரென்று பார்க்கவேண்டும்; அவ்வாறு பார்த்தால், சந்தேகமே உருவாம் அகந்தை ஒழியும்; அதுதான் சந்தேகமற்ற ஆத்மஸ்திதி. மனத்தை ஆத்மாவில் நிலைபெறச் செய்து, எண்ணமெதுவும் அற்றிருக்க வேண்டுமென்பதே கீதோபதேசம்.

தொடரும்

# திரு ரமணக் குறள்

உலகுக்காய் செய்கிற உத்தம கர்மம்
விலக்காமல் செய்வீர் விழைந்து.

வாரிஅருள வந்தவர்க்கும் வாராத பேர்களுக்கும்
பாரினில் ஆருமிலை பார்.

முனிவர் ரமணர் மொழிந்தவையே வேதம்
தனியாக வேறுண்டோ தேர்.

காவிய கண்ட கணபதியார் பேரமைதி
சேவித்து அடைந்தார் சிறக்க.

மந்திர சப்தமது மேலெழும் அத்தலத்தில்
சிந்தைகொள ஞானியருட் சொல்.

அருணை மலைஈர்த்து ஆட்கொண்ட ஞானி
கருணை அருளுண்டு காண்.

கறிகாய் அரிவார் கனகச் சிதமாய்
பரிவோடு போதம் பகர்ந்து.

அப்பளம் இட்டுப்பார் ஆனம அறிவுண்டு
தப்பாமற் சொல்வார் தெரி.

மெய்மறந்து பக்தர் முருகனார் தோய்ந்திருப்பர்
மெய்யாம் பகவான் முனம்.

தெய்வம்என்று ஒன்றைத் தொழுதறியார் தெய்வமெனில்
மெய்துறவி அன்றியாரும் இல்.

*மனமுருகி மெய்யுருகி வார்த்திடுவார் பாக்கள்*
*கனவுநனவு எல்லாம்மா முனி.*

*ஆறாண்டு ஞானியோடு ஆறஉளம் அன்னையார்*
*கூறாமல் வந்தது கூற்று.*

*ஹஸ்ததீக்ஷை அன்னைக்கு அந்திம காலத்தில்*
*வஸ்துஞானி ஈந்த அருள்.*

*பத்தொன் பதாம்தேதி பாழ்த்தமே மாதத்தில்*
*இத்தரை நீத்துஉயர்ந்தார் தாய்.*

*அன்னமிட்ட அன்னை அருணையுடன் ஐக்கியம்*
*அன்னைக்கோர் ஆலயம் ஆம்.*

*காஞ்சிப் பெரியவர் கைகாட்ட பால்பிரண்டன்*
*விஞ்சஉளம் தாள்ரமணர் பால்.*

*வெள்ளையர் பால்பிரண்டன் மாமுனிவர் கண்ணோக்க*
*கொள்ளைகொள் கண்தீட்சை காண்.*

*வந்தவழி போவென்பார் வாலிபனுக் கோதுக்கம்*
*அந்தவழி போகும் அகந்தை.*

*சூரிநா கம்மை தொடுத்தார் மெய்ஞானி*
*நேரிலுதிர்த்து ஈந்த நல் முத்து.*

*ஏதும் புரியாது இருந்தும் ரிபுகீதை*
*ஏதுபயன் எண்ணாது இரு.*

*இம்மியும் ஓராது சம்பூர்ண அம்மாளும்*
*பெம்மான் சொல் படித் தார்.*

*(தொடரும்)*

# மஸ்தான்பாபா மாலை

## கருணா (எ) நமச்சிவாயம்

அண்ணா மலையார் அன்பால் மலைத்த
அன்பர் மலையே மஸ்தான்பாபா
ஆசி ரமணப் பெயரில் முதல்முதல்
ஆசிரமம் அமைத்த மஸ்தான்பாபா
இளமை முதலே இறைமை முளைத்த
வளர்பிறை வளமை மஸ்தான்பாபா
ஈகை குறிக்கும் இசுலாம் விரிக்கும்
தோகை மயிலே மஸ்தான்பாபா
உலகத் திலகம் மலர்மதி ரமணரின்
தளபதி யாகிய மஸ்தான்பாபா
ஊரின் எல்லையில் ஊருணிக் கொல்லையில்
ஊற்றெழும் வள்ளமை மஸ்தான்பாபா
எல்லாம் வல்ல அல்லாவின் அருளை
எல்லார்க்கும் சொல்லும் மஸ்தான்பாபா
ஏசுவாய் ஆசி ஏகமாய்ப் பூசி
ஆசிக்கும் ஆட்சி மஸ்தான்பாபா
ஐப்பசி மாதம் ஐக்கிய மாகிய
அருட்பெருஞ் சோதி மஸ்தான்பாபா
ஐயர் இனம்முதல் ஐயனர் இனம்வரை
கையிணைத்துத் தொழும் மஸ்தான்பாபா
ஒன்றே குலம் குன்றே தளம்
நன்றாய்ந்த உளம் மஸ்தான்பாபா
ஓடு ஏந்தி வீடு வீடாய்
ஏடிட்ட ஏந்தல் மஸ்தான்பாபா
கர்த்தர் மெழுமு வர்த்திக் கதிர்போல்
கார்த்திகை வார்கதிர் மஸ்தான்பாபா
காசி ஈசர் ஆசிக்கும் தேசூர்
வாசியாய் வந்த மஸ்தான்பாபா
கிரிமணி ரமணர் மெய்தனில் அணியத்
தறிதனில் நெய்த மஸ்தான்பாபா
கீர்த்தி இசுலாம் மூர்த்தி இந்து

கோர்த்த திசுவாம் மஸ்தான் பாபா
குருபரன் மலையும் குர்ரான் மறையும்
உரமுறும் உறவு மஸ்தான் பாபா
கூறிய வார்த்தை குறைவாய் வார்த்து
தேறிய தேற்றம் மஸ்தான் பாபா
கெம்பும் செம்பும் ஒன்றாய் ஒன்றும்
கெம்பீரக் குன்றம் மஸ்தான் பாபா
கேளா தளிக்கும் ரமணருக் குணவு
மாளா தளித்த மஸ்தான் பாபா
கொட்டு முரசாய் குருபுகழ்ப் பொட்டிடக்
கட்டிய கட்டிடம் மஸ்தான் பாபா
கோவணம் துண்டு கோனகம் கொண்டு
கொடுத்திட்ட தொண்டு மஸ்தான் பாபா
சங்கடம் குருவுக்கு திருடர் சங்கமிட
பொங்கிய சிங்கம் மஸ்தான் பாபா
சாலுபி உசைனார் தோளினில் உலவிய
மாலுமி மழலை மஸ்தான் பாபா
சிவனார் லிங்கம் சிகரம் தாங்கும்
ரமண ராசாங்கம் மஸ்தான் பாபா
சீர்குரு கரத்தால் நீறுற்ற வரத்தால்
பார்பெரு பரிமளம் மஸ்தான் பாபா
சுவாமி முனுசாமி சுவிகரத் துறவாய்
சுவாசித்த உறவு மஸ்தான் பாபா
சூனியம் செய்வினைக் கோய்வினை அளித்து
தேனியம் தெளிக்கும் மஸ்தான் பாபா
செகத்தின் மத்தியாம் அசத்தும் அசலத்தை
அகத்தில் அமர்த்திய மஸ்தான் பாபா
சேர்த்துத் தொண்டரைத் தோத்திரத் தோட்டம்
வார்த்திட்ட வாத்யம் மஸ்தான் பாபா
சொந்தம் பந்தம் சந்த சுகந்தமாய்
வந்த வசந்தம் மஸ்தான் பாபா
சோறு தானிட்டு சோர்வைத் தாளிட்ட
சோராத தானியம் மஸ்தான் பாபா
தமிழும் தவமும் தனது தன்மையாய்த்
தழுவிய தனிமை மஸ்தான் பாபா

தானாய் முளைத்துத் தானாய் விளைந்த
தேனார் மலைச்சுளை மஸ்தான் பாபா
திருப்பணி சேவையே திருமணம் செய்த
பொறுப்பணி பொறுமை மஸ்தான் பாபா
தீர்ந்து கரையா தீர்த்தங்கரர் போல்
தீர்த்தக்கரை யறம் மஸ்தான் பாபா
துவா செய்யும் தீன்குலம் பெய்யும்
தூய மெய்யம் மஸ்தான் பாபா
தூற்றலும் போற்றலும் ஏற்றலாய் வீற்ற
மாற்றிலாத் தேற்றம் மஸ்தான் பாபா
தெள்ளார் உள்ள எல்லார் உள்ளமும்
அள்ளிய ரமணம் மஸ்தான் பாபா
தேசூர் அகில அம்மை வாக்கினால்
தேக்கிய ரமணம் மஸ்தான் பாபா
தொடங்கிய பணியில் தடங்கல் துணிக்கும்
மடங்குள மணிவாள் மஸ்தான் பாபா
தோப்புக் கரணமும் தொழுகைச் சரணமும்
தோள்தழுவுங் கரம் மஸ்தான் பாபா
நவம்பர் எட்டில் சிவம்பரம் இட்ட
தவம்பரப் பொட்டு மஸ்தான் பாபா
நாத்திகம் ஏற்ற சமத்துவ சாஸ்திரம்
நேத்திரம் வீற்ற மஸ்தான் பாபா
நிகழும் காலமும் நிலைபக்கக் காலமும்
புகழும் கோலம் மஸ்தான் பாபா
நீக்கிப் பார்க்க நினைக்கும் பாரினில்
தூக்கித் துணைநிற்கும் மஸ்தான் பாபா
நுனிப்புல் அணிந்த பனித்துளிப் பளிங்கென
கணிப்பில் கனிந்த மஸ்தான் பாபா
நூலகம் மறந்து தாளகம் மலர்ந்த
சீலகச் சீலம் மஸ்தான் பாபா
நெய்யில் நெய்து செய்த சுவையென
மெய்யில் நெய்த மஸ்தான் பாபா
நொதித்து நொதித்துத் திதித்த தேனமாய்ப்
பதித்தப் புதினம் மஸ்தான் பாபா
நோய்நொடி துரத்திய தோழமைத் துறவர்க்குத்

*தாய்மடித் தாயத்து மஸ்தான் பாபா*
*பள்ளி வாசலும் பல்லுரு வாசலும்*
*பல்லுரப் பாசம் மஸ்தான் பாபா*
*பாபா பாபா பாபா பகர*
*பாபம் பதறும் மஸ்தான் பாபா*
*பிச்சை மேவி கூவிய காவிக்*
*கச்சைக் குருவி மஸ்தான் பாபா*
*பீதாம் பரங்கள் பாதம் பற்றினும்*
*சாதாம் பரமுற்ற மஸ்தான் பாபா*
*புத்தம் சரணம் கச்சாமியாய் மனம்*
*பூத்த ரமணம் மஸ்தான் பாபா*
*பூத கணங்களும் பூதரன் அணங்குவும்*
*ஓத உதிருயிர் மஸ்தான் பாபா*
*பெயராம் ரமணப் பெருமை தழைக்க*
*அயரா தழைத்த மஸ்தான் பாபா*
*பேராயிரத் தல விழுதுகள் விழித்தெழ*
*வேராகும் தலம் மஸ்தான் பாபா*
*பொதிகை மொழியும் போதிக்கும் விழியும்*
*பொதிந்த பொதுவழி மஸ்தான் பாபா*
*போட்டி பொறாமை வாட்டிடும் பொறையில்*
*காட்டிய கருணை மஸ்தான் பாபா*
*மண்டித் தொழுகையும் மண்மடித் தொழுகையும்*
*தொண்டிட்ட தோழமை மஸ்தான் பாபா*
*மாசிலா கனியென மாசிவ ரமண*
*மாறிலாக் கணிப்பு மஸ்தான் பாபா*
*மிக்கத் துணையும் பக்கத் துணையும்*
*தக்கத் துணையும் மஸ்தான் பாபா*
*மீறிச் செல்லும் ஆறின் வெள்ளமாய்*
*ஊருற்ற செல்லம் மஸ்தான் பாபா*
*முனிமார் வணங்கும் சமண இனத்து*
*மணிமார் மனங்கவர் மஸ்தான் பாபா*
*மூன்றாம் பிறையில் முன்னின்று நிறையும்*
*ஈன்றாள் இறைவம் மஸ்தான் பாபா*
*மெருகு செருகிய மேரு சிறகென*
*பெருகும் பெருமை மஸ்தான் பாபா*

மேலும் மேலும் தாளடி தலையிட
ஆலடி அடங்கிய மஸ்தான் பாபா
மொகலாய நிலம் விளைந்த விலையிலா
அகலாம் விளக்கு மஸ்தான் பாபா
மோட்சம் தனிலும் மோசம் தனிலும்
மாட்சிமை தானிடும் மஸ்தான் பாபா
ரமலான் இனமும் ரமணன் இனமும்
ரமித்த இனிமை மஸ்தான் பாபா
ராகம் வார்த்த ரமண மாலையில்
தாகம் தீர்த்த மஸ்தான் பாபா
லட்சுமி பயம்பொன் லட்சியம் பண்ணா
லட்சத்து அருளென் மஸ்தான் பாபா
லாபம் நமக்கும் சாபம் தமக்குமாய்
சோபித்த சோதி மஸ்தான் பாபா
லிங்க மணியும் வங்க மணியும்
தங்கும் தங்கமணி மஸ்தான் பாபா
லீலை புரிந்து வேளையில் விரிந்த
மாலை தரித்தமலை மஸ்தான் பாபா
வரவை வணங்கி வரவிடும் வரிசையில்
வறுமை வரவிடும் மஸ்தான் பாபா
வாகன வாகையாம் நந்தி வந்து
வானகம் வாவென்ற மஸ்தான் பாபா
விடாத மழையிலும் வீதிவலம் தவழ்
தடாகத் தவரதம் மஸ்தான் பாபா
வீடு வீடாய் விடாத விடிந்திட்ட
பீடுடைப் பீடம் மஸ்தான் பாபா
வெண்ணீ றளித்துக் கண்ணீர் தெளித்த
அண்ணாவி மலையன்பு மஸ்தான் பாபா
வேகம் கெடுத்த வேந்தன் கொடுத்த
யோக வியூகம் மஸ்தான் பாபா
வையகம் வந்து வாழ்வழி தந்த
மெய்யக வழிவாம் மஸ்தான் பாபா
வையினும் வாழ்த்தினும் வழிந்து வாங்கும்
தையின் தயையாம் மஸ்தான் பாபா

# புத்தக மதிப்புரை

## ஸ்ரீ பகவானும் அடியேனும்

*(பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் அத்யந்த சீடர் ஸ்ரீசத்குரு அண்ணாமலை ஸ்வாமிகளின் டைரிக் குறிப்புகள்)*

ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் அத்யந்த சீடரான ஸ்ரீ அண்ணாமலை ஸ்வாமிகளின் டைரிக் குறிப்புகளான "ஸ்ரீரமண நினைவுகள்" என்ற நூல் தற்போது இரண்டாம் பதிப்பாக "ஸ்ரீ பகவானும் அடியேனும்" என்ற பெயரில் ஸ்ரீ அண்ணாமலை ஸ்வாமிகளின் பிரதம சீடரான ஸ்ரீசுந்தரம் ஸ்வாமிகளால் மீண்டும் அச்சிட்டு வெளியிடப் பட்டுள்ளது. இந்த இரண்டாம் பதிப்பில் புதிய பகுதிகளாக

1. செந்தமிழ்க்கவி K.V. இராமசந்திரக் கவிராயர் எழுதிய பத்துப் பாடல்கள் (வெண்பா) அடங்கிய "ஸ்ரீ ரமண விருடிகள் (ரிஷிகள்) திருத்தசாங்கம்" மற்றும் அதன் பொழிப்புரையும்

2. கைவல்ய நவநீதத்தில் இருந்து பகவான் தேர்ந்தெடுத்து குறிப்பிட்டுக் கூறியுள்ள பத்து பாடல்களுக்கு உரையும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்விரண்டு பகுதிகளும் ரமண பக்தர்களுக்கு வரப்பிரசாதம் போலாம்.

"இந்நூலில் தன்னை மறவாமல் கர்மம் செய்வது கர்மயோகம்"

"ஆசையே மாயை; நிராசையே தெய்வம்"

"மனம் உதிக்கும் இடத்தில் ஒன்றி இரு."

போன்ற நாமறிந்த பகவானது உபதேசக் கருத்துக்கள் நன்கு எளிய முறையில் விளக்கப்பட்டுள்ளன.

"கண்ணை மூடித் தியானம் செய்யலாமா?

மோக்ஷம் அடைவது எப்படி?

உலகுக்கு உபகாரம் செய்வது எப்படி?

ஆன்ம வித்தை சுலபமா?

நடைமுறை அத்வைதம் எது?

மனம் அழிய வழி என்ன?

*மனோலயம் என்றால் என்ன?*
*பல பேதங்களை கடவுள் படைத்தாரா?*
*பேதங்கள் ஆவியில் இருந்தனவா?*
*அல்லது இடையில் வந்தனவா?*
*புருவ மத்தி தியானம் சரியா?*
*நமஸ்காரத்தின் தத்துவ விளக்கம் என்ன?*
*ஞானி-அஞ்ஞானி பேதம் காண்பதெப்படி?*
*பகவானது பாதம் என்றால் என்ன?*
*சரணாகதி செய்வது எப்படி?*
*முக்தர்களுக்கு தேகாத்ம புத்தி உண்டா?" - போன்ற பல வினாக்களுக்கு இந்நூலில் விடை கிடைக்கின்றது.*

*மேலும் இந்நூலில் உள்ள:-*

*மகிஷாசுரனுக்கு அம்பாள் அருளிய ஹிதோபதேசம் நமக்கும்தான்.*

*மனோநாசமானால் எந்த உலகும் இல்லை என்பதற்கு பகவான் கூறிய கதை நமக்கு நல்ல வழிகாட்டி.*

*தத்தாத்ரேயர் கதையில் அவரது 24 குருமார்களிடம் அவர் கற்றுக் கொண்டவை பற்றிய விவரங்கள் நமக்கும் நல்ல பாடமே.*

*சின்னப்பிள்ளைகள் பகவான்மீது காட்டிய பரிவு நம் கண்களில் கண்ணீரை வரவழைக்கிறது.*

*ஒரு யோகியின் நிலைபற்றி பகவான் கூறிய விளக்கக் கதை பின்பற்றத் தக்கதே.*

*சாந்தோக்ய உபநிடதத்தில் வரும் கனவு கண்டவன் கதை பற்றிய பகவானது விளக்கம் ஒரு நல்ல திருப்புமுனை, யாவர்க்கும்.*

*மேலும் பகவான் உபவாசம் இருக்க முயன்று காட்டுக்குச் சென்றபோது நடந்த சம்பவங்களது வர்ணனை, படிப்பவர்க்கு மேலும் வியப்பை ஊட்டுகிறது.*

*பகவானைப் பாட்டி திட்டிய கதை நம்மைத்தான் குறிக்கிறதோ! நமக்குத் தானோ என்னும்படி உள்ளது.*

*ஞானிகளுக்கு 'எல்லாம் ஒன்றே' என்ற கருத்தினை விளக்கும் ஜனகரது கதை நல்ல விளக்கமாகும் நமக்கு.*

வேதாந்தம் பற்றிய நூலாயிற்றே என்று தயங்குபவர்களும்கூட விருப்பத்துடன் விடாது படித்து முடிக்கும் அளவிற்கு இயல்பான நடையுடன் இந்நூல் எழுதப் பட்டுள்ளது இதன் சிறப்புகளில் ஒன்றாகும்.

ஸ்ரீ ரமணர், ஸ்ரீ அண்ணாமலை சுவாமிகளது சமாதி ஆலய வண்ணப்படங்கள் உயிரோட்டமானவை. மேலும் சில வண்ண/சாதா படங்களும் இணைக்கப் பட்டுள்ளன.

தரமான காகிதத்தில் இந்நூல் அச்சடிக்கப் பட்டுள்ளது. மிகத் தெளிவான அச்சுக்கோப்பு படிப்பவர் கண்களுக்கு சிரமமில்லாமல் செய்கிறது.

ஸ்ரீ ரமணரது சகஜ மார்க்கத்தைக் குறித்து ஆன்ம சாதகர்களுக்குப் பல விளக்கங்களைத் தருவதாக இந்நூல் அமைந்துள்ளது ஸ்ரீ பகவானது கருணையே.

ஸ்ரீபகவான் குறிப்பிட்டுக் கூறியுள்ள கைவல்ய நவநீதப் பாடல்களை மேற்கோளாகக் காட்டும் இடங்களிலும்;

ஸ்ரீ ரமண விருடிகள் (ரிஷிகள்) திருத்தசாங்கப் பாடல்களின் ஆரம்பத்திலோ/முடிவிலோ "இப்பாடல்களின் உரை இந்நூலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது" என்று குறித்திருக்கலாம்.

மொத்தத்தில் இந்நூல் ஸ்ரீரமண-அண்ணாமலை அன்பர்களுக்கு வரும் சந்தேகங்களை நீக்கி; பயத்தைப் போக்கி; ஆன்மநிஷ்டை கூடஉதவும் என்பது திண்ணம்.

இந்த நூலின் விலை. ரூ. 60

பக்கங்கள் xiv+85

வெளியீடு:

சுந்தரம் ஸ்வாமி<br>
ஸ்ரீசத்குரு அண்ணாமலை ஸ்வாமிகள் ஸ்பிரிச்சுவல் டிரஸ்ட்<br>
10/12 மகாசக்தி நகர்<br>
யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம் பின்புறம்<br>
ஸ்ரீ ரமணாச்ரமம் அஞ்சல்<br>
திருவண்ணாமலை 606603<br>
Mobile: 9150741455/9003039517<br>
email: annamalaiswamytrust@gmail.com

# செய்திகள்

## திருவண்ணாமலை செய்திகள்

### ஸ்ரீ ரமணாச்ரமம்

ஸ்ரீ வித்யா ஹோமம்

*கடந்த ஆண்டுகளைப் போலவே ஸ்ரீ வித்யா ஹோமம் இவ்வாண்டும் ஆச்ரமத்தில் மார்ச் மாதம் 21 ஆம் தேதி வெகு சிறப்பாக நடைபெற்றது. காலை தொடங்கிய பூஜை, சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் மற்றும் ஜபங்களுடன் ஸ்ரீ சக்ர மேருவிற்கு நடந்தேறியது. பூஜை முடிவில் கலசநீரைக் கொண்டு பகவான் மற்றும் மாத்ருபூதேச்வரர் சமாதிக்கு அபிஷேகம் செய்விக்கப்பெற்றது. அன்பர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு அம்பாளின் பூரண அனுக்கிரகத்தைப் பெற்றனர்.*

அக்ஷரமணமாலை பாராயணம்

*ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அக்ஷரமணமாலை நூற்றாண்டை யொட்டி நாள்தோறும் காலை மற்றும் மாலை 6.00 மணியளவில் சிறப்புப் பாராயணம் நடைபெற்று வருவது அனைவரும் அறிந்ததே. 30-3-2014 அன்று திருமதி. மால்குடி சுபா அவர்கள் பகவான் சந்நிதியில் அமிர்தவர்ஷிணி ராகத்தில் பாடினார்.*

### ஆசிரியரின் ஆஸ்திரேலியப் பயணம்

*ஸ்வாமி விவேகானந்தரின் 150ஆவது ஆண்டு விழா உலகமுழுதும் கொண்டாடப்படுகிறது. இந்திய அரசாங்கம் உலகின் பல்வேறு இடங்களில் இதற்கான நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இந்திய அரசாங்கத்தின் ------ அமைப்பு இதற்காக நம் ஆசிரியர் டாக்டர். ராம் மோஹன் அவர்களை* Academic Co-ordinator *ஆக நியமித்துள்ளது. இதன் தொடர்பாக ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடந்த அகில உலக மகாநாட்டில் இந்தியக் குழுவின் தலைவராக ஆசிரியர் சென்று பேருரை ஆற்றினார். உலகின் பல்வேறு*




*நாடுகளில் இருந்து வந்திருந்த தத்துவ அறிஞர் பலர் பங்கேற்ற இம்மாநாடு, மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டில் இந்தியத் தூதரும் பங்கேற்று உரையாற்றினார்.*

*மாநாடு பிப்ரவரி 23 அன்று முடிவுற்றது.*

## சனாதன பௌத்த தர்ம மாநாடு:

*பின்னர் போபால் மற்றும் சாஞ்சி நகரில் நடைபெற்ற இந்து-பௌத்த தர்ம மாநாட்டிலும் ஆசிரியர் அமைப்பாளராக இருந்து சொற்பொழிவாற்றினார். உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் பௌத்த-இந்து சமய அறிஞர் பலர் வந்திருந்து, வேதாந்தம், மஹாயானம், தேர வாதம், யோகம், தியானம், கல்வி போன்ற பல துறைகளிலும் அறிஞர் பலர் உரையாற்றினர்.*

## அக்ஷரமணமாலை நூற்றாண்டு சிறப்பு நிகழ்வுகள்

### தஞ்சை

*14-3-2014 அன்று வெள்ளிக்கிழமை பிரதோஷ நேரத்தில் தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தில் ஆயிரக்கணக்கில் கூடியிருந்த பக்தர்கள் அனைவருக்கும் அக்ஷரமணமாலை புத்தகம் விநியோகிக்கப்பட்டு அனைவரும் பாராயணத்தில் கலந்துகொண்டனர். அன்றே தஞ்சை மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் அமைந்துள்ள சுமார் 15 சிவன் கோவில்களில் பிரதோஷ காலத்தில் அக்ஷரமணமாலை கையடக்கப் பிரதி இலவசமாக விநியோகிக்கப்பட்டது.*

### ஒட்டன்சத்திரம்

*நூற்றாண்டு காணும் பகவான் எழுதியருளிய அருணாசல அக்ஷரமணமாலை ஒருநாள் தொடர் பாராயணம் 16-3-2014*

*அன்று காலை 6 மணிக்கு தொடங்கப்பட்டு மாலை 6.30 மணிவரை இடைவிடாது 41 அமர்வுகள் நடந்தது. நூற்றுக்கும் அதிகமானோர் கலந்துகொண்டு பாராயணம் செய்தனர். அன்பர்களுக்கு பகவான் திருவுருவப்படம் மற்றும் அக்ஷரமணமாலை புத்தகம் இலவசமாக விநியோகிக்கப்பட்டது. அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## குடியாத்தத்தில் வெட்டவெளியில் நட்டமாடிடும் அருணாசல ரமணன்

*ஒவ்வொரு ஆங்கிலப் புத்தாண்டு அன்றும் குடியாத்தத்தில் உள்ள பாமர மக்களால் ரமண ஜயந்தி வெட்டவெளியில் கொண்டாடப்படுகிறது.*





பூண்டி

*திருவையாரைச் சுற்றியுள்ள சப்த ஸ்தானம் எனப்படும் ஏழு ஊர்களையும் சுற்றி சிவனடியார்கள் மே மாதத்தில் தேவார திருவாசக பாடல்களை ஓதி நடைபயணம் மேற்கொள்வர். இவ்வாண்டு அக்ஷரமணமாலை நூற்றாண்டையொட்டி அருணாசல அக்ஷரமணமாலையும் பாடிப் பரவ உள்ளனர்.*

இராமநாதபுரம் முருகனார் மந்திரம்

*இராமநாதபுரத்தைச் சுற்றியுள்ள அழகன்குளம், சாரதா குடில், பனைக்குளம், சித்திரமுத்தடிகளார் ஆச்ரமம், சொக்கநாதர் சுவாமி ஆலயம், ஐயப்பன் ஆலயம், தேவிபட்டணம்-பெருவயல் ரணபலி முருகன் ஆலயம், உத்தரகோசமங்கை ஆகிய இடங்களிலும் மற்றும் திருச்சுழி சுந்தர மந்திரம், ரமண வித்யா பீடத்திலும் முருகனார் மந்திரம் சார்பாக அக்ஷரமணமாலை ஓதி, விளக்கம் சொல்லி, கூடியிருந்த அனைவருக்கும் அக்ஷரமணமாலை கைப்பிரதி இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் பல இடங்களில் இத்தொண்டு தொடர்ந்து கொண்டுள்ளது.*

*- செய்தி, சிரஞ்சீவி, முருகனார் மந்திரம்*

## மும்பையில் அக்ஷரமணமாலை நூற்றாண்டு விழா

*இடம்: சுவாமி விவேகானந்தா ஆடிட்டோரியம், ராமகிருஷ்ணா மிஷன் & மடம், 12வது ரோடு, கர், மும்பை*

*ஏப்ரல் 20, ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 4.00 மணியளவில் சுவாமி சர்வயோகானந்தா முன்னிலையில் அக்ஷரமணமாலை நூற்றாண்டு விழா கொண்டாடப்பட இருக்கிறது. திருவாளர்கள் வே. கணேசன், மற்றும் பிரும்மஸ்ரீ நொச்சூர் வேங்கடராமன் சிறப்புச் சொற்பொழிவாற்ற உள்ளனர்.*

# ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட், மைலாப்பூர், சென்னை

## இனிவரும் நிகழ்வுகள்

## ஸ்ரீபகவான் 64ஆவது ஆராதனை தினம்

ஞாயிறு, ஏப்ரல் 27, 2014

காலை

| | |
|---|---|
| 6.00 a.m. | நாதஸ்வரம் |
| 7.00 a.m. | மஹன்யாசம், ஏகாதச ருத்ர ஜபம், வேதபாராயணம் |
| 10.00 a.m. | ஸ்ரீ ரமண சஹஸ்ரநாமம் |
| 10.45 a.m. | தமிழ் பாராயணம்: "உள்ளது நாற்பது, அக்ஷர மணமாலை" |
| 12.15 p.m. | அன்னதானம், தீபாராதனை. |

மாலை

| | |
|---|---|
| 4.15 p.m. | விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் |
| 4.45 p.m. | பக்திப் பாடல்கள் - Students (Deciple of Geetha) |
| 5.45 p.m. | பகவான் பாத மஹிமை - ஹரிகதா, ஸ்ரீமதி. சியாமளா ராமச்சந்திரன் |
| 6.45 p.m. | மயிலை மாடவீதிகளில் ஸ்ரீபகவான் திருவுருவப் படம் வீதியுலா |
| 7.15 p.m. | "அக்ஷரமணமாலை" - கூட்டுப் பாராயணம் |
| 8.48 p.m. | Merger of Sri Bhagavan in Arunachala - (ஆன்மாவாம் அருணாசலனோடு அண்ணல் ரமணர் ஒடுங்கிய தருணம்) |

## ரமணரின் வாழ்வும் வாக்கும் - தேசிய கருத்தரங்கு

ஞாயிறு, மே 4, 2014

பிற்பகல்

| | |
|---|---|
| 2.00 p.m. | வேதபாராயணம் |
| 2.45 p.m. | 'Ramana Devotional' - by RASA ARPITA Disciples of Dr. Ambika Kameshwar |
| 3.45 p.m. | Calling the Session - Mrs. Vasantha Raghavan |
| | Inauguration Speech Poojya Raman Swami, Sri Ramakrishna Mutt, Chennai |

மாலை

| | |
|---|---|
| 4.15 p.m. | Dr. ராமசுப்ரமணியன், Professor I.I.T. (Mumbai) "வேதாந்தத்தில் விசாரம்" |
| 5.15 p.m. | தேநீர் இடைவேளை |

| | |
|---|---|
| 5.30 p.m. | Dr. S. ராம் மோஹன், ஆசிரியர், "ரமணோதயம்"<br>"அருளெனும் ஏணி" |
| 6.15 p.m. | இசைக்கவி ரமணன்<br>"கவிஞன் நோக்கில் பகவான்" |

## அன்னை அழகம்மாள் மகாபூஜை

வியாழன், மே 22, 2014

முற்பகல்

| | |
|---|---|
| 8.45 | வேதபாராயணம் |
| 9.15 | ரமண பக்திப் பாடல்கள் |
| 10.15 | "மாத்ருபூதேச்வரர் அஷ்டோத்ரம்<br>ரமண ஸஹஸ்ரநாமம்<br>அக்ஷரமணமாலை பாராயணம் |
| 11.15 | தீபாராதனை பிரஸாதம்<br>மங்களம் |

## ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை

## ஸ்ரீபகவான் 64ஆவது ஆராதனை தினம்

*ஞாயிறு, 27 ஏப்ரல் 2014*

முற்பகல்

| | |
|---|---|
| 8.00 | வேதபாராயணம் |
| 9.00 | ரமண அஷ்டோத்ர பூஜை |
| 9.30 | ரமண சந்நிதிமுறை பண்முறைப் பாடல் - திருவாசக<br>செந்நாவலர் சத்குருநாத ஓதுவார், மயிலை<br>கபாலீஸ்வரர் திருக்கோயில் |
| 11.00 | அக்ஷரமணமாலை பாராயணம் |
| 11.30 | சிறப்புப் பிரசாதம் |

## அன்னை அழகம்மாள் மகாபூஜை

வியாழன், மே 22, 2014

மாலை

| | |
|---|---|
| 5.00 | வேதபாராயணம் |
| 6.00 | ரமண பக்திப் பாடல்கள் |
| 7.00 | "மாத்ருபூதேச்வரர் அஷ்டோத்ரம்<br>அக்ஷரமணமாலை பாராயணம் |
| 7.30 | தீபாராதனை பிரஸாதம்<br>மங்களம் |

# டெல்லி ரமண கேந்திரா பொன்விழா நிகழ்வுகள்

*50 ஆண்டுகளுக்கு முன்பு பாரதத்தின் தலைநகரான டெல்லியில் ரமண கேந்திரம், பேராசிரியர் கே. சுவாமிநாதன் அவர்களால் பாரத பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களைப் போன்றோரின் ஆதரவுடன் துவக்கப்பட்டது. இதன் தலையாய பணியாகக் கூற வேண்டுமானால் முருகனார் அவர்களின் 'ரமண ஞான போதம்' எட்டுப் பாகங்களாக வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டுகளில் மேலும் பல சமூகப் பணியாற்றி வரும் இக்கேந்திரம் மார்ச், 29 மற்றும் 30, 2014 ஆகிய தினங்களில் தனது பொன்விழாவைக் கொண்டாடியது.*

*29-3-2014 சனியன்று நீதியரசர் கே. ராமமூர்த்தி, தலைவர், ரமண கேந்திரா அவர்கள் வரவேற்புரையாற்ற, திருவண்ணாமலை ரமணாச்ரம தலைவர் வே.சு. ரமணன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். கர்நாடக முன்னாள் ஆளுநர் திரு.டி.என். சதுர்வேதி துவக்கவுரை நிகழ்த்தினார். இவ்விரண்டு நாட்களிலும் விழாவில் பங்குகொண்டு சிறப்புரை ஆற்றியவர்கள் திரு. வே. கணேசன், முன்னாள் ஆசிரியர், மௌண்டன் பாத், ஸ்வாமி பிரபுத்தானந்த சரஸ்வதி, தலைவர், ஹர்ஷ வித்யா மந்திர், ஸ்வாமி சித்ரூபானந்தா, சின்மயா மிஷன், ஸ்வாமி நிகிலானந்த சரஸ்வதி, தலைவர், சின்மயா மிஷன், டெல்லி, ஸ்வாமி சாந்தாத்மானந்தஜீ, தலைவர், ராமகிருஷ்ண மடம், டெல்லி, பிரம்மஸ்ரீ நொச்சூர் வேங்கடராமன், டாக்டர் ராம் மோஹன், ஆசிரியர், 'ரமணோதயம்', டாக்டர் சாரதா, தலைவர்,* RMCL, *பெங்களூர், ஜி. காமேஷ்வர், இணை ஆசிரியர்,* Ramana Way, *பிரபல வழக்கறிஞர் ஆர். வேங்கடரமணி மற்றும் டாக்டர் கலாராணி ரங்கசாமி, மதுரை ஆகியோர்.*

*டாக்டர் கரன்சிங் அவர்கள் இவ்விழாவில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விரண்டு நாட்களிலும் இரவில் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விழா ஏற்பாடுகளை மிகவும் சிறப்புற ஆற்றிய பெருமை திரு. கிருஷ்ணன், செயலாளர், ரமண கேந்திரா, டெல்லி அவர்களைச் சாரும்.*

*டெல்லி ரமண கேந்திரம் மேன்மேலும் சிறப்புற 'ரமணோதயம்' தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.*

முன்னாள் ரமணாச்ரம தலைவர் சுவாமி ரமணானந்தா (வெங்குட்டு) அவர்களின் நூற்றாண்டு பிறந்ததின விழா மே 26, 2014 அன்று கொண்டாடப்பட உள்ளது.

## ஏ.வி. சுப்ரமணியன்

*மாபெரும் பன்மொழி அறிஞர். 'ரமணோதயம்' ஆலோசகருமான திரு. ஏ.வி. சுப்ரமணியன் அவர்கள் ஜனவரி 27ஆம் தேதி பகவானிடம் சேர்ந்தார். தமிழ், சம்ஸ்க்ருதம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெரும்புலமை பெற்ற ஏ.வி.எஸ். மூன்று மொழி இலக்கியங்கள் குறித்து 150க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். மேலும், தத்துவ மற்றும் சமய நூல்களையும் எழுதியுள்ளார். இவரது தேவார,*



*திவ்யப் பிரபந்த சொற்பொழிவுகளும், உபநிடதச் சொற்பொழிவுகளும் பெரும் வரவேற்பைப் பெற்றவை. 'ரமணோதயம்' தொடங்கிய காலத்திலிருந்தே அதன் சிறப்பு மிக்க ஆலோசகராகச் செயல்பட்டு வந்த ஏ.வி.எஸ்., தனது தேவாரம் பற்றிய கட்டுரைகளாலும், பெரும் வரவேற்பைப் பெற்ற 'இடையன் கண்ட சிவலிங்கம்' போன்ற ஆன்மிகத் தொடர் கதைகளாலும் ரமணோதயத்திற்கு மெருகூட்டினார். பல நாடுகளிலும் இந்திய கலாச்சாரம், தத்துவம் பற்றிய இவரது சொற்பொழிவுகள் எல்லோராலும் மிகவும் மதிக்கப்பெற்றவை. பகவான் மீது தீவிர பக்தி கொண்ட ஏ.வி.எஸ். இன் மறைவு ரமண பக்தர்கட்கு ஈடுசெய்ய இயலா இழப்பாகும்.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், | | |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| **குரோம்பேட்டை,** ரமணாலயம் | .......... | 9444261296 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| **புதுச்சேரி** ரமண கேந்திரம் | .......... | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| **மலையாண்டிபட்டினம்** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| **பொள்ளாச்சி** ரமண குமார் | .......... | 9487016880 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | .......... | 9486576687 |
| **ஓசூர்** அசோக்குமார் | .......... | 8643842772 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.

# டெல்லி ரமண கேந்திரா
# பொன்விழா காட்சிகள்









Registered with the Registrar of Newspaper for India RNI No: TNTAM/2001/5542

